விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு ——— Valampurii ———

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 13 செவ்வாய்க்கிழமை (26.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 38

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து






யாழ். தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்திலிருந்து வாக்குப்பெட்டிகள் கிளிநொச்சிக்கு எடுத்துச்செல்லப்படுவதையும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கடமையில் இருப்பதையும் படங்களில் காணலாம்.

படங்கள்-ரம்ஷன்

# நாட்டின் அடுத்த ஜனாதிபதி யார்?

# இன்று தேர்தல்; முடிவு நாளை!



## அனைவரையும் வாக்களிக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் ஆறாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது. இத் தேர்தல் இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரையும் நடை பெறும். தேர்தல் முடிவுகள் நாளை அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். வாக்களிக்கத் தகுதிபெற்ற அனைவரையும் தவறாது வாக்களிக்குமாறு தேர்தல்கள் செயலகம் கோரியுள்ளது. இத் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

### தேர்தல்கள் திணைக்களம் விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எவ்வாறு என்பது தொடர்பாக தேர்தல்கள் திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது. தேர்தலில் 22 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் தங்களுக்குரியவரை புள்ளடியிட்டு வாக்களிப்பதா? அல்லது ஒன்று, இரண்டு, மூன்று என இலக்கமிட்டு வாக்களிப்பதா? என்பது குறித்து வாக்காளர்கள் மத்தியில் குழப்பம் நிலவுகின்றது. (16ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியான முறையில் தேர்தலை முன்னெடுக்க அரசு ஒத்துழைப்பு

### ஜனாதிபதி செயலகம்

(கொழும்பு)

அமைதியான முறையில் தேர்தலை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் பூரண அர்ப்பணிப்புடன் செயற்படும் என ஜனாதிபதி செயலகம் அறிக்கை விடுத்துள்ளது.

அமைதியானதும் சுதந்திரமானதுமான முறையில் தேர்தல்களை நடத்த சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென அரசாங்கம் கோரியுள்ளது.

அமைதியான முறையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு சகல வழிகளிலும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் (16ஆம் பக்கம் பார்க்க)

# கடந்த ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்க புலிகளுக்கு 180மில். ரூபாயை அரசு வழங்கியது

### டிரான் அலஸ் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்காக 180 மில்லியன் ரூபாய் நிதி விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட்டதுடன் அதனை பசில் ராஜபக்ஷ தனது அலுவலகத்தில் வைத்தே எமில்காந்தனிடம் வழங்கியதாக டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நாவலயில் உள்ள தனது வீட்டில் நேற்று முன்தினம் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டதற்கமையவே இந்தப் பணம் கொடுக்கப்பட்டது.

2002ஆம் ஆண்டில் தாம் முதலில் எமில்காந்தனைச் சந்தித்ததாகவும் ஜயலத் ஜயவர்தனவினால் அவர் தனக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டதாகவும் எமில்காந்தன் புனர்வாழ்வு அமைச்சில் பணியாற்றி வந்ததாகவும் டிரான் அலஸ் கூறியுள்ளார். அப்போது பிரதமராக பதவி (02ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புக்கு வாகனம் வழங்கியவரின் வீட்டின் மீது நேற்றிரவு தாக்குதல்!

### ஆவரங்காலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரத்திற்கு வாகனத்தை வாடகைக்கு கொடுத்த பொது மகன் ஒருவரின் வீடும் அவரின் வாகனமும் நேற்றிரவு ஆவரங்காலில் ஆயுததாரிகளினால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் யாழ்.அலுவலகமும் தாக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களை ஈ.பி.ஆர்.எல்.எப். (சுரேஷ் அணி) கட்சியின் யாழ்.மாவட்ட செயலரும் சுரேஷ் பிரேமச்சந்திரனின் செயலாளருமான ரமேஷ் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று இலட்சம் வாக்காளர் அட்டைகள் வடக்கில் விநியோகிக்கப்படவில்லை

### பிரதி அஞ்சல் மா அதிபர் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு இன்று நடைபெறவுள்ள நிலையில் வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் மூன்று இலட்சம் வாக்காளர்களிற்கு இதுவரை வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாத மக்களில் பலரை தபால் நிலையங்களில் காணக் கூடியதாக இருந்தது. (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் நேற்று முன்தினம் இரவு கடத்தல்?

சுயாதீன ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான பிரகீத் ஹெக்நேலியகொட நேற்று முன்தினம் இரவு காணாமல் போயுள்ளார். ஹோமாகமவில் இவரின் வீட்டுக்கு அருகில் இலக்கத் தகடு அற்ற வெள்ளை வான் நிறுத்தப்பட்டிருந்ததை பிரதேசவாசிகள் அவதானித்துள்ளனர்.

ஹெக்நேலியகொட ராஜகிரியவில் உள்ள லங்கா ஈ நியூஸ் அலுவலகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு 9மணியளவில் வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போதே காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை 9.30முதல் அவரது கையடக்கத் தொலைபேசி செயலிழந்துள்ளது.

இவர் கடத்தப்படுவதற்கு முன்னர் ஹெக்நேலியகொடவின் தொலைபேசியில் அவரது நண்பர் ஒருவர் அழைப்பை எடுத்தபோது, போவது கொஸ்வத்தை பிரதேசத்திற்கு அல்ல எனக் கூறுவதை கேட்க முடிந்துள்ளது.

ஹெக்நேலியகொட சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வந்ததுடன் லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தில் சுயாதீன ஊடகவியலாளராக அரசியல் கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். அத்துடன் தேசிய புத்திஜீவிகள் சபையின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகிறார். (ச-5)

# பிரதிப் பொலிஸ் மா அதிபரின் திடீர் இடமாற்றம் இரத்து

வடமாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெவ்கேயின் இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த இடமாற்றம் தொடர்பாக கிடைக்கப் பெற்ற சில முறைப்பாடுகளை அடுத்து பொலிஸ் மா அதிபருக்கு இதனை அறிவித்துள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் ஆலோசகர் பந்துல குலதுங்க தெரிவித்தார்.

அரசியல் யாப்பின் 17ஆவது திருத்தத்திற்கும் கடந்த டிசம்பர் மாதம் 8ஆம் திகதி வழங்கப்பட்ட ஆலோசனைக்கும் முரணாக இந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே இந்த இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு தொலைநகல் மூலம் அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் மா அதிபர் எழுத்து மூலம் அறிவித்ததற்கமைய உடன் அமுலுக்கு வரும் வகையில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெவ்கே பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் சமுகமளித்திருந்தார்.

இதேவேளை வவுனியா தலைமையக பொலிஸ் அத்தியட்சகர் சமல் சிகேராவுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்ட இடமாற்றத்தையும் இரத்துச் செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் தேர்தல்கள் செயலகத்தின் ஆலோசகர் பந்துல குலதுங்க தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கென இரகசியப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க அப்பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ச)

# ஆயிரம் ரூபாவுக்கு அடையாள அட்டைகள் வவுனியாவில் கொள்வனவு செய்யப்படுகிறது

## ஜயலத் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

வவுனியா நலன்புரிக் கிராமங்களிலுள்ள வாக்காளர்களிடம் ஆயிரம் ரூபா பணம் கொடுத்து அடையாள அட்டைகள் வாங்கப்படுவதாக குற்றம் சுமத்தியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, தேர்தல் துஷ்பிரயோகங்களை மேற்கொள்ளவென வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு தெற்கிலிருந்து பெருந்தொகை சிங்களவர்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

வடக்கிலிருந்து இந்தத் தகவல் தமக்கு கிடைத்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

வவுனியா நலன்புரி முகாம்களிலுள்ள அப்பாவித் தமிழர்களிடம் பலவந்தமாக அடையாள அட்டைகள் பறிக்கப்படுகின்றன. தெற்கிலிருந்து பெருந்தொகை சிங்களவர்கள் அங்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவத்தின் பலம் அதிகமாக உள்ளதால் அரசாங்கத்தின் துஷ்பிரயோக செயற்பாடுகளும் அதிகமாக இருக்கும்.

மக்கள் வாக்களிப்பதற்காக போக்குவரத்து சேவைகளை வழங்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது. எனினும் தேர்தல் தினமான இன்று எந்தவொரு அரச பஸ்ஸும் சேவையில் ஈடுபடுத்தப்படக்கூடாது என யாழ்ப்பாணத்தில் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

அது தவிர வடக்கு கிழக்கில் இன்னும் பகிர்ந்தளிக்கப்படாமல் ஏராளமான வாக்காளர் அட்டைகள் தபால்நிலையங்களில் தேங்கிக் கிடக்கின்றன. அதற்குப் பதிலாக என்ன செய்ய வேண்டும் என்பதை அரசாங்கம் இதுவரை சொல்லவில்லை. இவ்வாறான சம்பவங்களை நோக்கும்போது ஆட்சி அதிகாரம் உள்ள தனிநபரின் தேவை கருதியே அரச ஆளணிகள் பயன்படுத்தப்பட்டு வருவதாக உறுதியாக கூற முடியும் என்றார். (ச-5)

# ரணிலின் வீட்டைச் சோதனையிட நீதிமன்றம் தடை விதிப்பு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவின் இல்லத்தை சோதனையிடுவதற்கு தேர்தல் விறாந்து ஒன்றை வழங்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்தக் கோரிக்கையை இரகசியப் பொலிஸார் கொழும்பு நீதவான் சாந்தினி மீகொடவிடம் சமர்ப்பித்திருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவரின் குறித்த இல்லத்தில் சட்டவிரோத சுவரொட்டிகளும், துப்பாக்கி உள்ளிட்ட வேறு பொருட்களும் இருப்பதாக பொலிஸ் மா அதிபருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் இந்தச் சோதனையை நடத்த விறாந்தொன்றை வழங்குமாறு இரகசியப் பொலிஸார் நீதிமன்றைக் கோரியிருந்ததாக தெரிகிறது. (ச-5)

# கடந்த ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்க...

வகித்த மகிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளுடன் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள ஒருவரை தேடித்தருமாறு கோரிக்கை விடுத்ததுடன் அவரிடம் தனது சகோதரர் பசில் ராஜபக்ஷவை அறிமுகப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டதாக அலஸ் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் தாம் எமில்காந்தனை பசில் ராஜபக்ஷவிற்கு அறிமுகப்படுத்தியதுடன் அவர்கள் இருவரும் தமது அலுவலகத்தில் சந்தித்துக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பசில் ராஜபக்ஷ அடிக்கடி எமில் காந்தனை தனது அலுவலகத்தில் சந்தித்ததாகவும் இருவருக்கிடையில் விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகவும் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

சில காலங்களின் பின்னர் இவர்கள் மிகவும் நெருக்கமான நண்பர்களாக மாறியதுடன் எமில் காந்தனைச் சந்திக்கும் போது பசில் தோள்மீது கைகோர்த்தபடி சம்பாஷணைகளில் ஈடுபட்டுவந்தார். இப்படியாக சந்திப்பு நடைபெற்ற போது ஒருநாள் பசில் ராஜபக்ஷ, பிரதமர் மகிந்தவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகளை உறுதிப்படுத்த புலிகள் எதனை எதிர்பார்க்கின்றனர் என எமில் காந்தனிடம் கேட்டார்.

அப்போது எதனையும் கூறாத எமில் காந்தன் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் பேசிவிட்டு அறிவிப்பதாக உறுதிவழங்கினார்.

இதன்மூலம் புலிகள் தேர்தலைப்பகிஷ்கரிக்கும் உதவியை மாத்திரம் பசில் ராஜபக்ஷவினர் எதிர்பார்த்தனர்.

அடுத்தக் கட்டப் பேச்சு வார்த்தையின் போது அதில் கலந்து கொண்ட எமில்காந்தன் விடுதலைப்புலிகளுக்கு படகொன்று தேவையெனவும் அதற்கு 180 மில்லியன் ரூபாய் செலவாகும் எனக் கூறியதாக தெரிவித்த டிரான் அலஸ், பணத்தைக் கொடுப்பதற்கு சில தினங்கள் தாமதமாகும் எனவும் பணத் தைத் தருவதாக எமிலிடம் கூறுமாறு பசில் தன்னிடம் கேட்டுக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் செலவுகளுக்காகக் கிடைத்த டொலர்கள் மற்றும் ரூபாய் என்பன இரண்டு பயணப் பொதிகளில் எடுத்துவரப்பட்டு வழங்கப்பட்டன.

தான் கைது செய்யப்படும் போது இந்தத் தகவல் அனைத்தையும் வெளியிட்டதாகவும் இதனையடுத்து தகவல் வெளியாவதைத் தவிர்ப்பதற்காக சட்ட மா அதிபர் தனக்கெதிராக சுமத்தப்பட்டிருந்த சகல குற்றச்சாட்டுக்களையும் விலகிக் கொள்வதாக அறிவித்தார்.

இதனையடுத்து மௌபிம பத்திரிகையின் துஷ்யந்த பஸ்நாயக்கவை கைது செய்து அவரை பணயமாக வைத்துக் கொண்டு தான் கூறிய தகவல்கள் பொய்யானவை என கடிதமொன்றைப் பெற்றுக்கொள்ள அப்போது ரகசிய பொலிஸாருக்குப் பொறுப்பாக இருந்த பிரதாப் பசிங்க முயற்சித்தார்.

இந்த விடயம் சம்பந்தமாக சகல தகவல்களும் 2007 பெப்ரவரி 10ஆம் திகதி சத்தியகடிதம் ஒன்றின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கியதாகவும் அதில் தற்போது மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கிவரும் உடுவே தம்மாலோக்க தேரர் கையளித்திட்டுள்ளதாகவும் அவர்குறிப் பிட்டுள்ளார்.

ஜனாதிபதியும் பசில் ராஜபக்ஷவும் தன்னை கொலை செய்ய முயற் சித்து வருவதால் இந்த விடயங்களை தான் ஊடகங்களுக்கு வெளியிடுவதாகவும் தன்னைக் கொலை செய்யும் முயற்சியின் முதல் கட்டமாகவே தனது வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதாகவும் டிரான் அலஸ் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தொடர்புகள் குறித்த தனது வாக்கு மூலங்களை தவிர பல சாட்சியங்கள் இருப்பதாகத் தெரிவித்த டிரான் அலஸ் தேவைப்பட்டால் அவற்றை வெளியிடப் போவதாகவும் கூறியுள்ளார்.

அதேவேளை தமது குடும்பத்தினருக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமானால் அது மகிந்த ராஜபக்ஷவினால் மாத்திரமே ஏற்படுத்தப்படும் எனவும் தனது மரணத்தை மகிந்தவினால் தீர்மா னிக்க முடியாது எனவும் அது பிறக்கும் போது தீர்மானிக்கப்படுகின்ற விடயம் எனவும் டிரான் அலஸ் கூறியுள்ளார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மங்கள சமரவீரவும் கலந்து கொண்டார். (ச-5)

# வாக்களிப்பு நேரம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கவுள்ளோர் இன்றுகாலை 7மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடையில் வாக்களிக்க முடியும்.

வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் அருகிலுள்ள தபாலகத்துக்குச் சென்று தமது வாக்காளர் அட் டையை பெற்று வாக்களிக்க முடியும். நாடு முழுவதிலும் 11ஆயிரத்து 98 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. (ச)

# ஆளும் கட்சியுடன் இணையமாட்டேன்– லால்

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைய உள்ளதாக வெளியான வதந்திகளில் உண்மையில்லை என ஜே.வி.பி கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

லால்காந்த ஜே.வி.பியிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து கொள்ள உள்ளதாக நேற்றைய தினம் பரவலாக செய்திகள் வெளியாகின. எனினும் இந்தச் செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என லால்காந்த குறிப்பிட்டுள்ளார். (ச-


## கலைப்பீட மாணவர்களுக்கான அறிவித்தல்

2005/ 2006 கல்வியாண்டு கலைப்பீட பொதுக்கலை மாணவர்களுக்கான குழுப்புகைப்படம் எதிர்வரும் 28/01/ 2010 (வியாழன்) மாலை 4.00 மணி அளவில் எடுக்கவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(525)

## Kugan Copyist

214C, Ramanathan Road, Thirunelvely

Internet Browsing, Computer Works, Photocopying, Book Binding, Spiral Binding, CD/DVD Writing, Scanning, Laminating, Dissertation Works, Colour and Black Laser Printing & Photo Editing

(518)

தேவை | Computer Typeing (Tamil & English)
தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை
சுயவிபரங்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

## முகவர் (Agent) தேவை

ஸ்ரீ லங்காவிலிருக்கும் பிரபல உப்பு நிறுவனத்திற்கு முகவர் தேவை. அயடின் கலந்த சுகாதாரமான உப்புதூள் வகைகள், கட்டி உப்பு வகைகளை யாழ்.மாவட்டத்தில் விநியோகிப்பதற்கு வணிக அனுபவமும், வாகன வசதியும் உள்ள உப்பு முதலீட்டாளர் தேவை.

தொடர்புக்கு:-
Turney பிஸ்கட்
இல.24/A, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 320 7009
077 460 9620 (C-4334)

## கொங்கிறீற் புளக்கல் இயந்திரம் (மெசின்) விற்பனைக்கு உண்டு

எம்மிடம் கொங்கிறீற் புளக்கல் தயாரிக்கும் இயந்திரம் (மெசின்) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-071 9134767
264, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம். (526)

## SPOKEN ENGLISH

அவசரமாக குறுகிய காலத்திற்குள் வெளிநாடு போகவிருப்பவர்களுக்கு இலகுவான முறையில் வீடுகளுக்கு வந்து ஓய்வு பெற்ற ஒருவரினால் ஆங்கிலம் பேசக் கற்றுக் கொடுக்கப்படும்.

தொடர்பு:-
(519) 077 4041904

# இன்று ஒரு தகவல்

## கோபம் கொள்ளாதீர்கள்!

நபிகள் நாயகம் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அவரைத் தேடி ஒருவர் வந்தார்.

"எனக்கு ஏதாவது அறிவுரை சொல்லுங்கள்" என்று கேட்டார்.

நபிகள் நாயகம் அவரை நிமிர்ந்து பார்த்துவிட்டு "கோபம் கொள்ளாதீர்கள்" என்றார்.

வந்தவர் மறுபடியும் கேட்டார்.

ஒவ்வொரு முறையும் அதே பதில்தான் அறிவுரையாக வந்தது.

வேறொரு சந்தர்ப்பத்தில் இன்னொருவர் வந்து அண்ணலாரிடம் "இறைத்தூதரே எனக்குப் பயன் கிடைக்கும் வகையில் ஏதாவது அறிவுரை கூறுங்கள். அதிகமான விடயங்களைச் சொல்ல வேண்டாம். நான் மறந்துவிடுவேன்" என்று கேட்டார்.

இப்பொழுதும் நபிகள் நாயகம் "கோபம் கொள்ளாதீர்கள்" என்று தான் கூறினார்.

இதன் விளக்கம் என்ன தெரியுமா?

ஒருவர் கோபத்தை அடக்குவதில் வெற்றிபெற்று விட்டால் அவரால் மன இச்சையின் மற்ற தவறான விளைவுகளையும் கட்டுப்படுத்திவிட முடியும்.

கோபம் இல்லையென்றால் எவ்வளவோ பிரச்சினைகள் இல்லாமல் போய்விடும்.

கோபம் இல்லாத மனதை சுலபமாகக் கட்டுப்படுத்திவிட முடியும்.

இந்த ஒரு பண்பை வளர்த்துக் கொண்டாலே ஏராளமான பிழைகள் – பாவங்களிலிருந்து விடுதலை பெற்றுவிட முடியும் என்பது அ னுபவ உண்மை.

ஆகவே "கோபம் கொள்ளாதீர்கள்" என்ற அண்ணலாரின் அறிவுரை அசாதாரணமானது. ஆழமானது.

அது சரி...

ஒரு மனிதனுக்கு கோபம் வந்துவிட்டால் என்ன செய்வது?

அதற்கும் நபிகள் நாயகம் ஒரு எளிய வழியைச் சொல்லிக் கொடுக்கிறார்.

"உங்களில் யாருக்காவது கோபம் வந்தால் அந்தச் சமயம் நீங்கள் நின்று கொண்டிருந்தால் அமர்ந்து விடுங்கள். அப்போது கோபம் தணிந்தால் நல்லது.

அமர்ந்த பின்பும் கோபம் தணியவில்லையா? அப்படியானால் படுத்து விடுங்கள்."

இதுதான் அண்ணலாரின் அறிவுரை.

இது ஓர் அழகிய அறிவுரை. பயனுள்ள அறிவுரை. உளவியல் அடிப்படையில் அமைந்துள்ள ஓர் அணுகுமுறை இது.

கோபம் கொப்பளிக்கும் மனதோடு நின்று கொண்டிருக்கும் ஒருவர் உட்கார்ந்து விட்டாலோ அல்லது படுத்துவிட்டாலோ அந்த நிலையில் மனதைக் கட்டுப்படுத்துவது அவருக்குச் சுலபமாகி விடுகிறது.

கோபம் வரும்போதும் நாம் என்ன செய்கிறோம் என்பது நமக்குப் புரிவதில்லை.

கோபம் தணிந்த பின் யோசித்துப் பார்த்தால் நாம் இப்படிச் செய்தோம் என்ற நினைவு வரும்போது நமக்கு வெட்கமாக இருக்கிறது.

மனிதனுக்கு வரும் பலவிதமான இடர்பாடுகளுக்கும் சினம் தவிர்ப்பு என்பது ஒரு முக்கியமான சிகிச்சை முறை.

இந்த உலகத்தில் ஆயுதங்களால் காயப்படுத்திக் கொள்பவர்களைவிட வார்த்தைகளால் காயப்படுத்திக் கொள்பவர்கள்தான் அதிகம்.

எனவே கோபம் கொள்ளாதிருப்போம்.

நபிகள் நாயகத்திடம் ஒருத்தர் கேட்டார்.

"இறைத்தூதரே என் மீது இரக்கம் காட்டுங்கள். நான் கொடியவனாக இருக்கிறேன். என் உள்ளம் கடினமாக இருக்கிறது. நான் என்ன செய்ய வேண்டும்?"

இதற்குப் பெருமானார் சொல்கிறார்.

"ஆதரவற்ற ஒருவருக்கு ஆதரவாக நீங்கள் உங்கள் கையை நீட்டுங்கள்.

பசித்திருக்கும் ஒருவருக்கு உணவிட்டுப் பசியைப் போக்குங்கள்" என்றார்.

நம்ம ஆள் ஒருத்தன் பெருமையாகச் சொன்னான்.

"சேர் எனக்கு அதிகமாகக் கோபம் வருவதில்லை. வருடத்துக்கு இரண்டு தடவைவரும். அவ்வளவுதான்!"

"அவ்வளவுதானா? பரவாயில்லையே!"

"ஆனால் ஒன்று... ஒரு தடவை வரும் கோபம் அடங்குவதற்கு ஆறு மாதகாலமாகும்."

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கைதடி முதியோர் இல்லத்துக்கு விரைவில் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படுவார்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியோரின் நலனைக் கருத்தில் கொண்டு விரைவில் நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும். என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கைதடியிலுள்ள அரச முதியோர் இல்லத்தில் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆண்கள் விடுதி கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப் பட்டது.

வடமாகாண ஆளுநர் இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்துவைத்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில், எமது அரசு ஆதரவற்ற மக்களுக்குப் பலவித உதவிகளை வழங்கி வருகின்றது. இன்று வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் இவ்விடுதியைத் திறந்து வைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

இந்த அரச முதியோர் இல்லம் எமது நாட்டின் முன்னாள் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலயால் திறந்துவைக்கப்பட்டு 56 வருடங்களாகின்றன.

எனது வயதும் 56 தான். நான் பிறந்த வருடத்தில்தான் இந்த முதியோர் இல்லமும் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள முதியோருக்கு சிறந்த உணவு, உடுதுணி, பராமரிப்புச் சேவைகள், பொழுது போக்கு வசதிகள் கிடைக்கின்றன.

அதற்கு எமது அரசு போதுமான நிதியை வழங்குகின்றது. இந்த இல்லத்திற்கென தரமான நூலகமொன்றை ஏற்படுத்திக் கொடுத்தோம். இன்று இந்த இல்லத்திலுள்ள 180 வரையிலான முதியோருக்கும் சேவை வழங்கவென தனியான மருத்துவர் ஒருவரை நியமித்துத் தருமாறு கோரியுள்ளனர்.

இங்கு நிரந்தர மருத்துவர் ஒருவர் தங்கியிருந்து சேவையாற்ற வேண்டியதன் அவசியம் எனக்கும் விளங்குகின்றது.

மிக விரைவில் நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமித்து உதவுவேன் என உறுதி கூறுகின்றேன்.

இம்முதியோர் இல்லத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் சிறந்த சேவை மனப்பான்மை உடையவர்களாக இருப்பதைக் காண்கின்றேன். அவர்களையும் இவ்விடத்தில் பாராட்டுகின்றேன் என்றார். (2-6)

# தேசிய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து போட்டியாளர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான தேசிய மட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 30, 31ஆம் திகதிகளில் ருவான்புர மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதில் வலிகாமம் கல்வி வலயத்தில் அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளும் யாழ்ப்பாண வலயத்தில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி மற்றும் ஆவரங்கல் விளையாட்டுக் கழகம் ஆகியனவும் பங்குபற்றவுள்ளன.

மேற்குறிப்பிட்ட அணிகளினை போட்டியில் பங்குபற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி வடமாகாண கல்வித் திணைக்களப் பணிப்பாளர் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுக் கொண்டுள்ளார். (6-30)

# புதன் பொதுவிடுமுறை தினம்

(கொழும்பு)

நாளை புதன் கிழமை பொது மற்றும் வங்கிகளின் விடுமுறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் தகவலை தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது. இதேவேளை தேர்தலில் வாக்களிக்கும் முகமாக அரச மற்றும் தனியார் பணியாளர்களுக்குப் போதுமான அளவு விடுமுறைகளை வழங்க வேண்டும் எனவும் தொழிலமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் தேர்தல் சட்டத்தின்படி இந்த விடுமுறைகளை வழங்குமாறு அமைச்சு கேட்டுள்ளது. (2-4)

# இராசி பலன்

*26-01-2010*
*(தை 13, செவ்வாய்க்கிழமை)*
*ஏகாதசி முன்னிரவு 9.03 மணி வரை*
*ரோகினி முன்னிரவு 6.59 மணி வரை*
*இராகுகாலம் 3.36 - 5.06 மணி வரை*
*சுபநேரம் 11-06-12.36 மணி வரை*
*பீம ஏகாதசி விரதம்.*

| | |
|---|---|
| மேடம் | வேலைச் சுமை, புதிய திருப்பம், முயற்சி தாமதம், விவாதம். |
| இடபம் | தெய்வ சிந்தை, உறவினர் சந்திப்பு, செய்தொழில் விருத்தி, போசன நன்மை. |
| மிதுனம் | உணர்ச்சிவசப்படல், தந்தை வழி உறவு, தன விரயம், தொழில் கஷ்டம். |
| கடகம் | மனமகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், காரிய அனுகூலம், உறவினர் வருகை. |
| சிங்கம் | காரிய நன்மை, பெருமையடைதல், சுகநலம், பொருள் சேர்க்கை. |
| கன்னி | அதிக பிரயாசை, கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, உறவினர் சந்திப்பு. |
| துலாம் | அபகீர்த்தி, காரிய தாமதம், வாகன பயம், போசன சுகம். |
| விருச்சிகம் | செய்தொழில் விருத்தி, தெய்வ சிந்தை, விருந்துபசாரம், முயற்சி கைகூடும். |
| தனுசு | பாராட்டு, எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, ஜனவசியம். |
| மகரம் | அமைதிக் குறைவு, காரிய தாமதம், தனவிரயம், வேலைச் சுமை. |
| கும்பம் | சுபசெலவு, வாகன சுகம், மனச்சஞ்சலம், முயற்சி தாமதம். |
| மீனம் | சகோதரர் உதவி, எடுத்த காரியம் கைகூடும், தன வருவாய், போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 |
| தக்காளி | 110 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 80 | 90 | 140 |
| பூசணி | 35 | 45 | 60 |
| புடோல் | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 80 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 180 | 200 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 140 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 100 | 110 | 80 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 70 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

## குருபூசைத்தினம்

(யாழ்ப்பாணம்)

கைதடி அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் குரு பூசைத்தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

இதில் காலை 7 மணிக்கு சமாதிபூசையும் 9 மணிக்கு கைதடி சைவ ஐக்கிய சங்கத்தினரால் பஜனை நிகழ்வும் காலை 11 மணிக்கு விசேட அபிஷேகமும் மற்றும் பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (6-4)

## கல்வி நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய அதிபர்களுக்கு 2010 ஆம் ஆண்டிற்குரிய கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான முதலாவது கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 30ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு வலயக் கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறுவுள்ளதால் சகல அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (2-30)

## அடிக்கல் நாட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

இசுறு பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 5 பாடசாலைகளின் கட்டடங்களைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் யா/ வறணி மகாவித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வரா, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி அடிக்கல்லை நாட்டி வைத்தார். இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (2-30)

## ஒன்லைன் மூலம் மின்கட்டணம்

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ். தபாலகத்தில் கணனி மூலம் (ஒன்லைன் சேவை) மின்கட்டணங்களை செலுத்தும் நடவடிக்கை தொடர்ந்து இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கை மூலம் கட்டப்பட்ட பணத்திற்கான தொகையையும், கழிக்கப்பட்ட கட்டணத் தொகையையும் உடனே அறியக் கூடியதாகவுள்ளதாகவும் இது கால தாமதத்தை தவிர்க்க உதவுவதாகவும் மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தற்போது யாழ்.குடாநாட்டில் நடைபெறும் இச் சேவையைப் போன்று ஏனைய பகுதிகளிலும் வெகுவிரைவில் இந்த ஒன்லைன் வசதி செய்யப்படவுள்ளதாக யாழ். தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (2)

## சித்திரை மாதம் பொதுச் சந்தை திறப்பு

(அல்வாய்)

பருத்தித்துறை பொதுச் சந்தையின் மேல்மாடிக் கட்டடத்திற்கு மேலும் 85 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுவதாக நகர சபைச் செயலாளர் பருத்தித்துறை பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் பொதுச் சந்தையின் கீழ் இயங்கும் கடைகளும் 85 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டபோதும் இதுவரை பாவனைக்காக திறந்துவைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மேல்மாடி கட்டடத்திற்கான வேலைகள் பூர்த்தியடைந்தவுடன் எதிர்வரும் சித்திரை மாதம் இப் பொதுச் சந்தை திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.(2-4-19)

## புனரமைக்கப்படாத நிலையில் வரணி -குடத்தனை பிரதான வீதி

(யாழ்ப்பாணம்)

வரணி -குடத்தனைப் பகுதியை இணைக்கும் பிரதான வீதியின் ஒருபகுதி சுமார் 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படவில்லை.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இவ் வீதியில் மக்கள் குடியிருப்பற்ற நிலப்பகுதியே இவ்வாறு நெடுங் காலமாக திருத்தப்படாமல் பாழடைந்து காணப்படுகின்றது.

வரணிப் பிரதேசத்திலிருந்து செல்லும் இவ்வீதி கட்டம் கட்டமாக கடந்த காலங்களில் திருத்தப்பட்டபோதும் மேற்குறிப்பிட்ட பகுதி ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை புனரமைக்கப்படாமலுள்ளது.

அதேவேளை, இவ் வீதியில் பாழடைந்த நிலையில் ஒரு சிறிய கண் மதகு ஒன்றும் காணப்படுகின்றது.

சுமார் 5 வருடங்களுக்கு முன்பு இப் பகுதியில் ஒருசிறிய மதகு ஒன்று புதிதாக கட்டப்பட்டது. அப்போது அப்பிரதேசத்தில் குறிப்பிட்ட தூரம் வரை மண்போடப்பட்டு தரை மட்டம் உயர்த்தப்பட்டது. திருத்தப்படாத பகுதியின் இரு மருங்குமுள்ள பற்றைகள் இயந்திர உபகரணங்களைக் கொண்டு துப்புரவாக்கப்பட்டது. அடுத்த வருடத்தில் இப்பகுதி புனரமைக்கப்படும் எனக் கூறப்பட்டது. இருந்தும், இன்றுவரை இவ் வீதிப் பகுதி புனரமைக்கப்படவில்லை.

மாரி காலங்களில் இவ்வீதியின் மேலாக காட்டு வெள்ளம் அவ்வப்போது பாய்வதனால் பாதை மண்பாதையாகவே தற்சமயம் காணப்படுகின்றது. அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக இவ்வீதி வெள்ளக் காடாக காட்சியளித்ததுடன் இப்பாதையூடான வாகனப் போக்குவரத்து சுமார் 2 மாதங்களுக்கு மேலாகத் தடைப்பட்டிருந்தது. தற்சமயம் "வடக்கின் வசந்தம்", "கமநெகும" போன்ற திட்டங்கள் மூலம் இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரப்படுகிறது. (2-6)

## ஸ்ரீ அம்மா பகவான் வழிபாடு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் பக்தர்களின் தியான வழிபாட்டிற்காக தினமும் காலை 6 மணிமுதல் காலை 8 மணி வரை சமுகமளித்து தங்கள் வேண்டுதல்களை ஸ்ரீ அம்மா பகவான் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் என சற்சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (2-4)




## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 இற்கு வரலாறு பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மதிப்பீட்டு வினாத்தாள் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 30 ஆம்திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு குறித்த ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (4-19)

## இடையூறு ஏற்படுத்தும் வாகனப் போக்குவரத்து

(அல்வாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்பக்க வீதியினால் குடத்தனைப் பகுதியில் இருந்து வலிகாமம், யாழ்ப்பாணத்திற்கு மண் ஏற்றிச் செல்லும் பாரவூர்திகள் வேறு பாதைகளால் செல்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் பாரவூர்திகள் தொடர்ந்தும் வைத்தியசாலை முன் வீதியால் செல்வதால் பொதுமக்கள் பல இடையூறுகளுக்குள்ளாவதாக வைத்தியசாலை நிர்வாகம் பருத்தித்துறை பிரதேச செயலாளரிடம் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-19)

## டெங்கு நோய் நுளம்புகளின் உற்பத்தி இடங்களை அழிக்கவேண்டும்

### டாக்டர் ஏ.எச்.எம்.மிஹ்லார்

(யாழ்ப்பாணம்)

புகை விசிறுவதால் மட்டும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தி விட முடியாது. மாறாக டெங்கு நோயைக் காவும் நுளம்புகள் உற்பத்தியாகும் வாழ்விடங்களை அழித்தால் மட்டுமே நோயைக் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு டாக்டர் ஏ.எல்.எம். மிஹ்லார் தெரிவித்தார். மேலும் டெங்கு நோய்கான நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை மனிதனே ஏற் படுத்திக் கொடுக்கிறான்.

எனவே மனிதனால் உருவாக்கப்பட்ட நுளம்பு வாழ்விடங்களை மனிதனே அழிக்க வேண்டும்.பல்மாடி அடுக்கு வீடுகள் தண்ணீரைக் கடத்தும் பீலிகள் என்பனவும் வாழ்விடங்களாக தொழிற்படுகின்றன. எனவே உற்பத்தியிடங்களை அழிப்பதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

டெங்கு நுளம்புக்கு மிகவும் விருப்பமானவை டயர்கள் ஆகும். புகை விசிறுவதால் தொற்றுதலுக்குள்ளான நுளம்புகள் 200 மீற்றருள் அழிக்கப்பட அல்லது விரட்ட முடியும். ஆனால் முட்டைகளோ , குடம்பிகளோ அழியாது.

எனவே, அவற்றை அழிப்பதனால் மக்கள் ஒருமித்துச் செயற்பட்டு கொள்கலன்களை அழிக்கவேண்டும் என்றார். (2-6)

## அனைவரும் இணைந்து செயற்பட்டு டெங்குநோயை இல்லாது ஒழித்திடுவோம்

### மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை.

நுளம்புப் பெருக்கமும் நோய்த்தாக்கமும் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கடந்த புதன்கிழமை வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுக்கான விசேட செயலணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே மேற்கண்டவாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் தென்மேற்குப் பகுதிகளில் தொடர்ந்தும் டெங்குக் காய்ச்சல் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.


தினசரி இப் பகுதிகளிலிருந்து மட்டும் ஐந்து பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த எண்ணிக்கை இம்மாத இறுதியில் இரு மடங்காக அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நோயின் தாக்கத்தால் 18பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மட்டும் இந்த ஆண்டின் முதல் இரண்டு வாரங்களில் 41 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மிகவும் துரிதகதியில் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் அனைவரும் இணைந்து செயற்படுவதுடன் என்றும் பொதுமக்கள் மத்தியில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார். (2-6)






வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலர் பிரிவு ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் எஸ்.கே.சிவலிங்கத்திற்கான பிரிவுபசார நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவு நிர்வாக கிராம உத்தியோகத்தர் இ.சபாநாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், கிராம உத்தியோகத்தர் எஸ்.கே. சிவலிங்கத்துடன் வலி.மேற்கு நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள், இடமாற்றம் பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# நாயக்கர் காலத்து ஓவியங்கள்

112

சித்திரங்களைப் பற்றி விளக்கக் குறிப்புகள் இடையிடையே எழுதப்பட்டுள்ளன. வால்மீகி ஆச்சிரமத்துக்கு நாரதர் வந்தவுடனேயே பூசை பண்ணி, புண்ணியக்கதை




சொல்லச் சொல்லிக் கேட்டதற்கு இராம சுவாமி புண்ணிய புருஷனென்று இராமாயணம் சொன்னது என்ற விளக்கத்துடன் சித்திரக்காட்சிகள் ஆரம்பமாகின்றன. பால கண்டம் முதலாகப் பரதன், இலக்குமணன் , சத்துருக்கன் ஆகியோர் திருமணங்கள் வரையான இராமாயணக் கதை சித்திரக் காட்சிகளாக இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அவற்றை அடுத்து பாகவத ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

சேதுபதிகளின் காலத்து அரசியல் நிகழ்ச்சிகள்,போர்கள், களியாட்ட விழாக்கள், அந்த புரக் காட்சிகள் என்பன பற்றிய ஓவியங்கள் இங்கு காணப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.உத்தர கோசமங்கையில் கோபுரம் காணப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். உத்தர கோசமங்கையிலுள்ள கோபுரத்திலும் அங்குள்ள நடராஜர் சன்னதியின் விதானத்திலும் இராமேஸ்வரத்திலும் வேறு சில தலங்களிலும் சேதுபதிகளின் காலத்து ஓவியங்கள் உள்ளன.

### மராட்டியர் காலத் தஞ்சாவூர் ஓவியங்கள்


சோழ நாட்டின் பிரதானமான பகுதிகள் தஞ்சை நாயக்கரின் ஆட்சியில் அடங்கியிருந்தன. தஞ்சாவூர் அவர்களின் இராசதானியாக விளங்கியது. பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாயக்கரின் ஆட்சி ஒழிந்து மராட்டியரின் ஆட்சி ஏற்பட்டது. தஞ்சாவூர்



சமஸ்தானத்தைச் சேர்ந்த பகுதிகளில் நாயக்கரதும் மராட்டியரதும் ஆட்சிக் காலங்களில் நடனம், இசை, ஓவியம் ஆகிய கலைகள் வளர்ச்சியடைந்தன. கர்நாடக தேசம், மகாராஷ்டிரம் ஆகியவற்றின் கலைப் பாணிகளின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவிலே ஏற்படலாயிற்று. ஓவியக்கலையினைப் பொறுத்தவரையில் மொகலாயக் கலைப் பாணியின் சில அம்சங்கள் தமிழ் நாட்டிலும் பரவலாயின.

நாயக்கரின் ஆட்சிக் காலத்திலே தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் சித்திர சாலையிற் புதிதாக ஓவியங்கள் வரையப்பட்டன.இரகுநாத நாயக்கரின் காலத்திலே அந்த ஓவியங்கள் வரையப்பட்டன. அவற்றுடன் கண்ணப்ப நாயனார், சக்கரதான மூர்த்தி, அட்டதிக்குப் பாலகர் என்போரின் ஓவியங்கள் குறிப்பிடற்குரியவை.

மராட்டியரின்ஆட்சிக் காலத்திலே சோழ நாட்டவரின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், ஆடையணிகள், இசை, ஓவியம் போன்ற கலைகள் ஆகியவற்றிலே வட தேசத் தொடர்புகளினாலும் மேனாட்டுத் தொடர்புகளினாலும் மாற்றங்கள் ஏற்பட்டன. தஞ்சாவூர் அரண்மனைக் கட்டடங்களிலும் திருவாரூர் முதலான வழிபாட்டுத் தலங்களிலும் அமைந்துள்ள சுவரோவியங்களில் ஓரளவிற்கு அந்த மாற்றங்களைக் கண்டு கொள்ளலாம்.



தஞ்சாவூர் அரண்மனையிலுள்ள பல இடங்களில் மராட்டிய மன்னர் காலத்துச் சுவரோவியங்கள் காணப்படுகின்றன. அரண்மனை வளாகத்துத் தர்பார் மண்டபத்தின் பின்புறச் சுவரிலும் வடக்குச் சுவரிலும் அக் காலத்தில் வரையப்பட்ட சித்திரங்கள் ஒளி குன்றியும் சிதைவுற்றும் காணப்படுகின்றன. வடக்குச் சுவரில் நாயக்கர் காலத்து ஓவியங்களுக்கு மேற் புதிதாக ஓவியங்கள் வரையப்பட் டுள்ளன. சரஸ்வதி மகாலுக்குப் போகும் வழியிலே வரையப்பட்டிருக்கும் இராமர் பட்டா பிஷேகக் காட்சி மராட்டியர் காலச் சித்திரக் கலையின் சிறப்பிற்குச் சிறந்ததோர் உதார ணமாகும்.

சரபோஜி மன்னர் காலத்து ஓவியங்கள் பெருவுடையார் கோயிலின் திருச்சுற்று மாளிகையிலும், அங்குள்ள அம்மன் கோயிலின் முகமண்ட விதானத்திலும், சுப் பிரமணியர் கோயிலின் முன் மண்டபத்திலும் காணப்படுகின்றன. அம்மன் கோயிலின் ஒரு பகுதியில் தேவி *மகாத்மியம்* சித்திரக் கோலமாக வரையப்பட்டுள்ளது. மற்றொரு பகுதியிலே தக்க யாகக் காட்சிகள் சித்திரங்களாக வரையப்பெற்றுள்ளன. மேலும் பக்கச் சுவர்களில் ராதா கல்யாணம், வள்ளி கல்யாணம், மீனாக்ஷி கல்யாணம் போன்ற வைபவங்கள் சித்திரக் கோலத்தில் அமைந்துள்ளன. அவற்றிலே குறிப்பிடத்தகக கலைச் சிறப்புக்கள் எவையும் காணப்படவில்லை.

சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மராட்டிய மன்னர்களான சரபோஜி, துக்கோஜி, சுஜான் பாயி பிரதாப் சிங், துளஜா,ஏகோஜி,ஷாஜி முதலியோரின் உருவங்கள் பெரிய அளவிலே வரையப்பட்டுள்ளன. அவற்றுட் சரபோஜியின் உருவம் மிகச் சிறப்புடையது. ஐரோப்பிய செல்வாக்கு, மொகலாயச் செல்வாக்கு என்பவற்றின் விளைவாகத் தமிழகத்து ஓவியங்களில் அரசரின் மாதிரி வடிவங்களை ஓவியங்களாக வரையும் வழக்கம் ஏற்பட்டதென்று கருதலாம்.

### கோனேரி ராஜபுரத்து ஓவியங்கள்

கோனேரிராஜபுரம், உடையார் பாளையம், நெய்தவாசல்,வெண்ணாற்றங்கரை, குறிச்சி முதலிய இடங்களில் மராட்டியர் கலைப்பாணியிலுள்ள ஓவியங்கள் உள்ளன. தஞ்சாவூருக்கு அண்மையிலுள்ள வெண்ணாற்றங்கரை என்னுமூரிலே ஆனந்த வல்லியம்மன் கோயில் என்னுமொரு ஆலயமுண்டு. அங்கு வனப்பு மிக்க ஓவியங்கள் சில காணப்படுகின்றன. அவற்றிலே சரஸ்வதியின் சித்திரம் மிகவுஞ் சிறப்பானது. தஞ்சாவூருக்குச் சிறப்பான வீணை யின் கோலம் அதிலே வனப்புடன் விளங்குகின்றது. கடவுளரின் வடிவங்களும், இசைவாணர், நாட்டியக்காரர் ஆகியோரின் கோலங்களும், தும்புரு, நாரதர், சுகமுனிவர் ஆகியோரின் உருவங்களும் சித்திரங்களாக வரையப்பெற்றுள்ளன.


திருப்பனத்தாளுக்குச் சமீபமாக அமைந்துள்ள குறிச்சி என்னும் ஊரிலுள்ள கோயிலின் முகமண்டபத்து விதானத்தில் இராமாயணக் காட்சிகள் சில ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. அவை 19 ஆம் நூற்றாண்டுக்குரியவை.

நெய்தவாசல் சிவன்கோயிலில் மராட்டியர் காலத்துச் சித்திரங்கள் சில காணப்படுகின்றன. அவை மேளக் கச்சேரியினையும் ஊர்வலக் காட்சியினையும் விளக்குஞ் சித்திரங்களாகும். திருச்சி மாவட்டத்து உடையார் பாளையத்தில் வரதராஜப் பெருமாள் ஆலயமொன்றுள்ளது. அங்குள்ள சுற்று மண்டபத்திலே இராமாயாணக் காட்சிகள் வரையப்பெற்றுள்ளன. அதன் நான்கு மூலைகளிலும் பீரங்கிகளைப் பெற்ற கோலத் தில் அயோத்தி நகரம் அங்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மராட்டியர் கால ஓவியங்கள் சில தஞ்சாவூர் மாவட்டத்து நன்னிலத் திற்கு அருகிலுள்ள கோனேரிராஜபுரம் சிவன் கோயிலில் உள்ளன. கோயிலுக்குச் சென்றி ருந்த ஐரோப்பிய பிரதானிகளுக்கு அளிக் கப்பட்ட வரவேற்பு காட்சி ஓவியமாக அங்கு வரையப் பெற்றுள்ளது. அவர்கள் மேளதாள வாத்தியங்களுடனும் நாட்டிய உபசாரங்களுடனும் வரவேற்கப்படும் கோலம் தெரிகின்றது. அரசரும், அந்தணரும், பொது மக்களும் கூடி அவர்களை வரவேற்குங் காட்சி தெரி கின்றது. மராட்டியரின் காலத்திலே தஞ்சாவூரிற் சுவேரோவியங்களோடு கண்ணாடி ஓவியங்களையும் ஓலைச்சுவடி ஓவியங்களையும் வரையும் வழக்கம் உண்டாகியது.கிருஷ்ணரைப் பற்றிய மரபு வழிக்கதைகளும் இராமர் பட்டாபிஷேகம் அரசின் உருவங்களும் கண்ணாடி ஓவியங்களாக வரையப்பட்டன.

### செங்கம் ஓவியங்கள்

செஞ்சி நாயக்க மன்னனால் கி.பி. 1600 இல் அமைக்கப்பட்டதும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்துச் செங்கம் என்னுமிடத்தில் உள்ளதுமான வேணுகோபால பார்த்தசாரதி கோயிலில் இராமாயணக் காட்சிகள் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. இக் கோயிலின் மகாமண்டபத்து விதானத்தில் இராமாயணக் கதை ஆரம்பத்திலிருந்து இராமர் பட்டாபிஷேகம் வரை சித்திரக் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்திர



சித்துவின் நிகும்பல யாகம், அவன் இலக்குவனோடு போர் புரிதல், சஞ்சீவி பர்வதத்தை அனுமன் கொண்டு வருதல், மேகநாதன் கொலைப்படுதல், இராவண சங்காரம், சீதையின் அக்கினிப் பிரவேசம் இராமர் பட்டாபிஷேகம் போன்ற காட்சிகள் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. இங்குள்ள ஓவியங்கள் தெலுங்கு மொழியிலுள்ள இராமாயணக் கதையினை ஆதாரமாகக் கொண்டவை என்பது குறிப்பிடற்குரியது. வான்மீகி இராமாயணத்திலும் கம்பராமாயணத்திலும் காணப்படாத அம்சங்கள் சில இங்குள்ள ஓவியங்களில் இடம்பெற்றுள்ளன.

பேராசிரியர் சி.பத்மநாதன்

விஜயநகர - நாயக்கர் கால ஓவியங்களிலே சில சிறப்பம்சங்கள் காணப்படும். அவற்றில் உருவங்கள் ஒரு பக்கத்தைப் பார்த்த கோலத்தில் அமைந்திருக்கும். மூக்கு, கண், முழங்கை, கால் போன்ற உறுப்புகள் சற்றுக் கூர்மையாக அவற்றிலே அமைந்திருக்கும்.

சித்திரங்களில் அணிலகன்கள் மிகுந்து காணப்படும். வண்ணப்பூச்சுகளிற் சிவப்பு நிறம் கூடுதலாகக் காணப்படும். சித்திரங்களின் விளிம்புகளில் பூவேலைப்பாடுகளும் வண்ணங்களும் அதிகமாயிருக்கும். பெண்களின் கூந்தல் பெரிய கொண்டையாகக் கட்டிய கோலம் தெரியும். ஓவியக் காட்சிகளின் சிறு குறிப்புகள் தெலுங்கிலோ தமிழிலோ எழுதப்பட்டிருக்கும்.

(முற்றும்)

# பூகம்ப இடிபாடுகளில் சிக்கியவர் 11 நாளுக்குப் பின் உயிருடன் மீட்பு

(போர்ட் ஒவ் பிரின்ஸ்)

ஹெயிட்டி நாட்டு பூகம்பத்தில் சிக்கிய ஒரு இளைஞர் 11 நாட்களுக்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். இங்கு கடந்த 12ஆம் திகதி 7.0 ரிக்டர் அளவுக்குப் பயங்கர பூகம்பம் தாக்கியது. தலைநகர் போர்ட் ஒவ் பிரின்சில் உள்ள அதிபர், பிரதமர் மாளிகைகள் தரைமட்டமாயின.



இரண்டு இலட்சம் பேர் வரை பலியாகி யுள்ளனர். அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியா உள்ளிட்ட ஏராளமான நாடுகள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

10 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டதால் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்கள் இனியும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்பதால் இந்தப் பணியை முடித்துக் கொள்ள மீட்புக் குழுவினர் திட்டமிட்டுள்ளனர். இதற்கிடையே நேற்று முன்தினம் போர்ட் ஒப் பிரின்ஸ் புறநகர்ப் பகுதியில் உள்ள ரூடு என்ற இடத்தில் நேபோலி என்ற ஹோட்டல் இடிபாடுகளை பிரான்ஸ் மற்றும் கிரீஸ் நாட்டு மீட்புக் குழுவினர் அகற்றிக் கொண்டிருந்தனர். இந்த ஹோட்டல் இடிபாடுகளில் சிக்கியிருந்த இளைஞர் பேச முடியாமல் கையசைத்தார்.

இதைக் கண்ட மீட்புக் குழுவினர் நான்கு மணி நேரம் போராடி இடிபாடுகளை அகற்றி அந்த 24 வயது நபரை மீட்டனர். இதைக் கண்ட அப்பகுதி மக்கள் கைதட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சோர்வாக இருந்த அந்த இளைஞருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பூகம்பத்தின்போது சிதறிய ஹோட்டலில் கிடந்த பொருட்களில் சிலவற்றை சாப்பிட்டும் கொக்கோலா போன்ற குளிர்பானங்களை குடித்தும் 11 நாட்கள் உயிர் வாழ்ந்ததாக விஸ்மாண்ட் எக்சாண்டஸ் என்ற இந்த இளைஞர் தெரிவித்தார்.

இவருடன் மேலும் ஐந்து பேர் உயிருடன் இருந்ததாக கூறினார். ஆனால் அவர்கள் ஏற்கனவே இறந்துவிட்டதாக மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். பூகம்பத்தால் ஐ.நா. அலுவலகம் இடிந்து விழுந்து அதிலிருந்த அதிகாரிகள் பலர் இறந்துவிட்டனர். இதனால் சர்வதேச நாடுகள் அளிக்கும் நிவாரணப் பொருட்களை முறைப்படி விநியோகிப்பதில் குழப்பம் காணப்படுகிறது. போதிய நிவாரணப் பொருட்கள் கிடைக்காத மக்கள் கடைகளை உடைத்துக்கொள்ளையடித்துச் செல்கின்றனர்.

வெளிநாட்டிலிருந்து வந்த நிவாரணப் பொருட்களையும் சிலர் கொள்ளையடித்துக் கொண்டு ஓடுகின்றனர். உணவு அளிக்கப்படும் சில முகாம்களில் நீண்ட வரிசையில் பெண்களும் குழந்தைகளும் பல மணி நேரம் நின்று பொருட்களை பெற்றுச் செல்கின்றனர். உணவு வழங்கும் இடங்களில் சில வன்முறைகளும் நடக்கின்றன. வன்முறையாளர்களைக்கட்டுப்படுத்த பொலிசார் கண்ணீர் புகை குண்டு களை வீசி நிலைமைகளை சமாளிக்கின்றனர். (2-6)

## எதியோப்பிய விமானம் விபத்து; பயணித்த 92 பேரும் பலி?

92 பயணிகளுடன் சென்ற எதியோப்பிய விமானம் விபத்துக்குள்ளானது. லெபனான் தலைநகர் பெரூட்டில் இருந்து எதியோப் பியன் ஏர்லைன்சுக்கு சொந்தமான போயிங்737 ரக விமானம் நேற்று காலையில் எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவுக்கு புறப்பட்டது.

விமானம்புறப்பட்டுசென்ற 45நிமிடங்களுக்குப் பிறகு விமானத்துக்கும் விமான கட்டுப்பாட்டு அறைக்குமான தொடர்பு துண்டிக்கப் பட்டது. விமானம் மத்தியதரைக் கடல் மேல் பறந்த போது விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என கூறப்படுகிறது.

விமானத்தில் இருந்தவர்களில் 45 பேர் லெபனானைச்சேர்ந்தவர்கள், எஞ்சியவர்களில் பெரும்பாலோனார் எகிப்தை சேர்ந்தவர்கள்.

மேலும் விமானம் நடுவானில் திடீரென தீப்பிடித்து எரிந்து விழுந்ததாக மத்திய தரைக் கடல் பகுதி கடலோர மக்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

விமான விபத்து குறித்த செய்தி அறிந்தவுடன் லெபனான் நாட்டு அதிகாரிகள் ரபீக் ஹரிரி விரைந்துள்ளனர். இந்த விமானத் தளத்தில் இருந்து தான் அந்த விமானம் புறப் பட்டுள்ளதாகவும் விமானத்தில் இருந்த அனைவரும் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (2-6)

## சீனாவில் சட்டவிரோதமான தங்க அகழ்வில் 7 பேர் பலி

சீனாவில் மலைப் பகுதியொன்றில் சட்ட விரோத தங்க அகழ்வில் ஈடுபட்ட 6 ஆண்களும் ஒரு பெண்ணும் பனியில் உறைந்து உயிரிழந்துள்ளனர்.

மொங்கோலிய எல்லையிலுள்ள ஹலஹதே மலைப் பிரதேசத்தில் சட்டவிரோத தங்க அகழ்வில் ஈடுபட்ட ஏனைய 14 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.




சட்டவிரோத தங்க அகழ்வில் இந்தக் குழுவினர் ஈடுபட்ட போது அவ்விடத்தில் 2 மீற்றர் உயரத்திற்கு பனிப் பொழிவு ஏற்பட்டதே மேற்படி உயிரிழப்புகளும் காரணமென தெரிவிக்கப்படுகிறது. (2-6)



பொலிவியா அதிபராக மீண்டும் தேர்வு பெற்ற அதிபர் ஈவோ மார்லஸ் இராணுவத்தில் அதிரடி மாற்றம் செய்தார். தலைநகர் லபாமாவில் புதிய இராணுவ அதிகாரிகளை நியமித்து அதற்கான பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டார்.

## ஆப்கானிஸ்தானில் பாராளுமன்றத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது

ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் ஜனாதிபதி தேர்தல் நடந்தது. இதில் கர்சாய் தேர்ந்து எடுக்கப்பட்டார். இந்த தேர்தல் நடந்த 5 மாதங்களுக்கு பிறகு மே மாதம் 22 ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இப்போது அது மேலும் 4 மாதங்களுக்கு தள்ளி வைக்கப்பட்டு உள்ளது. செப்டம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை இந்த தேர்தல் தள்ளிவைக்கப்பட்டு உள்ளது என்று தேர்தல் ஆணையாளர் பாசில் அகமது மனாவி தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தலை நடத்துவதற்கு நிதி ஒதுக்கப்படாததாலும் பாதுகாப்பு இல்லாததாலும் தேர்தல் தள்ளிவைக்கப்பட்டு உள்ளது. பாராளுமன்ற தேர்தலை நடத்துவதற்கு கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய் தேவைப்படும் என்று அவர் அறிவித்து இருந்தார். இதற்கு வெளிநாடுகள் நிதி உதவி அளித்தால் தான் முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஹமீத் கர்சாய் வென்ற அதிபர் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதை தொடர்ந்து தற்போதைய தேர்தல் முறைகள் சீரமைக்கப்படும் வரையில் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டி ருந்தன.

அதிபர் தேர்தலில் இருந்து ஏராளமான பாடங்கள் கற்க வேண்டியிருப்பதாக ஐ.நா சிறப்புத் தூதர் கேய் எய்டி குறிப்பிட்டிருந்தார். அத்தோடு நிதிப் பற்றாக்குறை இருப்பதாக தான் நம்பவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## கல்விச் சுமைகளால் மன அழுத்தத்துக்கு உள்ளாகும் சீனச் சிறுவர்கள்

## ஆய்வில் தெரிவிப்பு

சீனாவில் பாடசாலை செல்லும் சிறார்கள் வகுப்புப் பாட சுமைகளாலும், பெற்றோரின் நெருக்குதலாலும் பல விதமான மன அழுத்தங்களுக்கு ஆளாவதாக பிரித்தானிய சீனா ஆய்வு குழுமம் ஒன்று தெரிவித்துள்ளது.



சீனாவின் ஷேஜியாங் மாகாணத்தின் கிராமிய மற்றும் நகர்ப்புற பாடசாலைகளில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாகாணத்தில் உள்ள 9 பாடசாலைகளில் 9வயதிற்கும் 12 வயதிற்கும் உட்பட்ட 2191 பிள்ளைகளில் நடாத்தப்பட்ட ஆய்வில் மொத்தத்தின் 63 வீதமான பிள்ளைகள் ஆசிரியரின் தண்டனைக் குள்ளா வதையிட்டும் , மொத்தத்தில் 73 வீத மான பிள்ளைகள் பெற்றோரின் உடல் ரீதி யான தண்டனைக்கு ஆளாவதையிட்டும் அச்சம் தெரிவிக்கின்றன என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பாடசாலையில் தரப்பட்ட அதிகளவு வீட்டு செயல்முறை பாடங்களுடன் நாங்கள் போராட வேண்டியுள்ளதாக பெரும் எண்ணிக்கையான குழந்தைகள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக மேற்படி குழந்தைகள் தலைவலி, வயிறு நோவு, மன அழுத்தம் போன்றவற்றால் அவதிப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நடைமுறையில் இருக்கும் மிக தீவிரமான போட்டி அடிப்படையிலான கல்வி முறைமையே இவ்வாறான நிலைக்கு காரணம் என ஆய்வு குழுமத்தின் தலைவரான லண்டன் பல்கலைக்கழக கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் தெரசே ஏஸ்கீத் தெரிவித்துள்ளார்.

சீனாவில் சடுதியாக ஏற்பட்ட துரித பொருளாதார வளர்ச்சியும், அதன் தாக்கமாக பாடசாலைகளில் குழந்தைகள் தங்கள் கல்வி செயல்முறைகளை சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பும், பிள்ளைகளின் மேல் அதிகரித்த அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலை மற்றும் பெற்றோர் மட்டத்தில் கல்வியின் உயர் பெறுபேறுகளில் மகிழ்ச்சியடைவதும் , பெறுபெறுகளின் பின்னடை வில் சகித்துக்கொள்ளாமையும், இவ்வாறான சிக்கலான நிலைக்கு முக்கிய காரணி என அவ் ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (2-6)



விருது வடிவமைப்பதற்காக தங்க முலாம் தயார் செய்யும் அமெரிக்கர்கள்

# யாழ். மாவட்டத்தில் வெளிநாடு சென்றவர்களின் வாக்குகளை எவரும் களவாட முடியாது

## மனோகணேசனிடம் தேர்தல் ஆணையாளர் உறுதி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் உள்ள சுமார் 7 இலட்சத்து 25ஆயிரம் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் சுமார் 3இலட்சத்து 50 ஆயிரம் வாக்காளர்கள் நாட்டில் இல்லை. இவர்களது பெயர்கள் கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்ட வாக் களிப்பு நிலைய பிரதம அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக வெளிநாடு சென்றிருந்து விட்டு சமீபத்தில் நாடு திரும்பியவர்கள் வாக்களிக்க வேண்டுமாயின் வாக்களிப்பு நிலையங்களுக்கு தங்களது கடவுச்சீட்டை கொண்டு செல்லவேண்டும். இதன் மூலம் போலி அடையாள அட்டைகளை பயன்படுத்தி வெளிநாடு சென்றவர்களின் வாக்குகளை எவராலும் களவாட முடியாது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உறுதியளித்துள்ளதாக ஜனநாய மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் எம்.பி.தெரிவித்துள்ளார்.


நேற்று காலை தேர்தல் ஆணையாளரை எதிரணிக் கட்சி தலைவர்கள் மனோகணேசன், கருஜெயசூரிய, அனுரகுமார திஸாநாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் சந்தித்தனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலின் போது சில வாக்களிப்பு நிலையங்களில் 99 விகித வாக்களிப்புகள் நடைபெற்றிருந்தன. இத்தகைய அதி உயர் விகிதாசாரத்தில் ஒரு போதும் வாக்களிப்பு நடைபெறுவதில்லை.

ஆனால் வாக்காளர் பதிவில் பெயர் இருந்தும் வெளிநாடு செல்கை மற்றும் பல்வேறு காரணங்கள் தொடர்பில் வாக்களிக்காதவர்களின் வாக்குகள் மோசடியாக களவாடப்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் வாக்களிப்பு நிலைய அதிகாரிகளை மிரட்டி வாக்குப்பெட்டிகள் பலவந்தமாக நிரப்பப்பட்டன.

இம்முறை அத்தகைய மிரட்டல் நடவடிக்கைகள் நடைபெறா வண்ணம் தேர்தல் அதிகாரிகளும், பாதுகாப்பு அதிகாரிகளும் எமது தேர்தல் முகவர்களும் உசார் படுத்தப்பட்டுள்ளனர். வாக்காளர் பதிவில் பெயர்கள் இருந்தும் வெளிநாடு சென்றவர்களின் வாக்குகளை இம் முறை போலியான அடையாள அட்டைகளை பயன்படுத்தி களவாட முடியாது.

இவ்விதமாக வெளிநாடு சென்றவர்களின் வாக்குகள் பயன்படுத்தப்படுமானால்



இவை தொடர்பில் சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலைய பிரதம அதிகாரிகள் பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விபரங்களின் படி வெளிநாடு சென்றுள்ளவர்களின் பெயர்களில் வாக்களிக்க வருபவர்களிடம் கடவுச் சீட்டை கோரி பரிசோதிக்க வேண்டும்.

அத்துடன் வாக்களிப்பு நிலையங்களில் இருக்கின்ற எமது எதிரணி தேர்தல் முகவர்களும் இது தொடர்பில் அவதானமாக இருப்பார்கள்.

எனவே தென்னிலங்கையில் இருந்து நபர்களைக் கொண்டு சென்று போலி அடையாள அட்டைகளை பயன்படுத்தி யாழ். மாவட்டத்தில் வாக்குகளைக் கொள்ளையடிக்க முடியாது. மேலதிக வாக்குகள் மோசடியாக வழங்கப்படுகின்றன. வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இரத்துச் செய்யப்பட்டு மீள் வாக்களிப்பு நடத்தப்படும் என்றார். (2-4)

## பொதுமக்களின் பார்வைக்காக குமணபறவைகள் சரணாலயம்

(கொழும்பு)

குமண பறவைகள் சரணாலயம் பல வருடங்களின் பின் பொதுமக்களின் பார்வைக்காக விரைவில் திறக்கப்படவுள்ளது.

நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள பிரபலமான இச் சரணாலயம் 427 விதமான பறவை இனங்களைக்கொண்டுள்ளதுடன் அதில் 250 இனங்கள் இலங்கையைச் சார்ந்தவையாக உள்ளன.

சைபீரியா மற்றும் வட ஐரோப்பாவில் ஏற்படும் உறை பனியிலிருந்து தம்மை விடுவிப்பதற்காக அப்பிராந்தியங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பறவை இனங்கள் புவியின் தென்பகுதி நோக்கி நகர்ந்து வருகின்றன. குமண சரணாலயம் அவைகளும் முக்கிய தங்குமிடமாகும். (2-6)

## காங்கேசன்துறைக்கு விரைவில் யாழ்தேவி வருமாம் !

(கொழும்பு)

விரைவில் காங்கேசன்துறை வரை யாழ்.தேவி தொடரூந்து சேவை நடைபெறும் என இலங்கையின் தொடரூந்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மூன்று கட்டங்களாக ஆரம்பிக்கப்படவுள்ள அதற்கான வேலைத்திட்டம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுனியா தொடக்கம் ஓமந்தை வரை முதலாவது கட்டத்திலும் ஓமந்தையில் இருந்து பளை வரை இரண்டாவது கட்டத்திலும் பளையிலிருந்து காங்கேசன்துறை வரை மூன்றாவது கட்டத்திலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

159 கிலோமீற்றர் நீளமான இத் தொடரூந்துப் பாதை 85 பாளங்களையும் 16 தொடரூந்து நிலையங்களையும் கொண்டிருக்கும்.

இதேவேளை காங்கேசன்துறை தற்போதும் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் இருப்பதனால் பொதுமக்கள் எவரும் குடியமர்த்தப்படவில்லை என்பதும் அங்கு இப்போது பெரிய இராணுவத்தளம் மட்டுமே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-6)

## யாழ்ப்பாணத்தில் தூதரக கிளையை திறக்க இந்தியா திட்டமிட்டுள்ளது

(கொழும்பு)

கொழும்பில் உள்ள இந்தியர் தூதரகத்தின் கிளை அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கு இந்திய அரசு திட்டமிட்டுள்ளதாக இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது, வடக்கில் அதிகளவு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு தனது ஆளுமையை அதிகரிக்க இந்தியா திட்டமிட்டு வருகின்றது.

இதற்கமைய யாழ்ப்பாணத்தில் இந்திய தூதரகத்தின் அலுவலகத்தை திறப்பதற்கு இலங்கையின் அனுமதிக்காக இந்தியா காத்திருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியா கொழும்பில் ஒரு தூதரகத்தையும் கண்டியில் துணைத்தூதரகம் ஒன்றையும் நிர்வகித்து வருகின்றது.

மேலும் வடபகுதியில் தொடரூந்து வீதி புனரமைப்புக்கு இந்தியா 425 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கியுள்ளதாக அவை மேலும் தெரிவித்துள்ளன. (2-6)

## தனியார் காணியில் இயங்கும் பொதுச்சந்தை

(அல்வாய்)

புலோலி மந்திரிகையின் 7 அரை மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக பொதுச் சந்தை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

எனினும் இதற்கு நிதி ஒதுக்கீடு இல்லாமையினால் வேலைகள் பூர்த்தியடையாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பருத்தித்துறை பிரதேச சபையால் நிரந்தர வைப்பில் பெரும் அளவில் நிதி இருந்தும் அந்நிதியைக்கொண்டு கட்டடவேலைகளைச் செய்வதற்கு உள்ளூராட்சி மன்ற பிராந்திய ஆணையாளரால் அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இப்பொதுச் சந்தை தனியார் ஒருவரின் காணியில் மிகவும் சிரமப்பட்டே இயங்கி வருவதாகவும் நீண்டகாலமாக இச் சந்தையின் வேலைகள் பூரணப்படுத்தப்படாமல் இருப்பதையிட்டு அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (4-19)

## தற்காலிக கடைகள்

(யாழ்ப்பாணம்)

தேர்தலை முன்னிட்டு வாக்களிப்பில் ஈடுபடுவதற்காக நல்லூர் வீதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வியாபாரிகள் தங்களது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இதனால் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் அவர்களது வியாபார நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு தற்காலிக கடைகள் அனைத்தும் கட்டப்பட்டு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2)

## செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த வடமராட்சி வலய விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக வடமராட்சி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (6-4)

## மீள இயங்க ஆரம்பித்துள்ள திருமலை சிங்களப் பாடசாலை

(கொழும்பு)

திருகோணமலை சிங்களப் பாடசாலை மீள இயங்க ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை இரக்கண்டியில் அமைந்துள்ள இந்த அரசாங்க சிங்களப் பாடசாலை கடந்த இருபது வருடங்களாக மூடப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கப் படையினருக்கும் இடையிலான மோதல்களின் காரணமாக 1985ஆம் ஆண்டு சிங்கள மக்கள் பிரதேசத்தை விட்டு வெளியேறியதனைத் தொடர்ந்து பாடசாலை மூடப்பட்டதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உபுல் வீரவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தப் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (2-6)


### இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்

அச்சுவேலி

### குளிரூட்டப்பட்டது

- முற்றிலும் நவீன வசதிகள் கொண்டது.
- 2000 பேர் ஒரே நேரத்தில் கதிரையில் அமர்ந்து கண்டுகளிக்கலாம்.
- 300 பேர் ஒரே நேரத்தில் கதிரை, மேசையில் இருந்து சாப்பிடும் வசதி.
- விஷேடமாக கேரளத்தில் (இந்தியா) இருந்து வரவழைக்கப்பட்ட சமையல் காரர்களினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை உங்கள் விருப்பம் போல உண்டு மகிழக் கூடியவசதிகள்.
- வீடியோ, போட்டோ வசதிகள்.
- குருக்கள், மேளம், மண்டபம் 25 ஆயிரம் ரூபா மட்டுமே (AC தேவையானவர்களுக்கு தனிக்கட்டணம் பெறப்படும்)

**விஷேட சலுகை**

வீடியோ கலாமினி ஸ்தாபனத்தால் வீடியோ, போட்டோ, பந்தல் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்பவர்களுக்கு இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நடைபெறும் திருமண விழாவிற்கு விஷேட சலுகையாக (இன்னிசைக்கச்சேரி) இலவசமாக வழங்கப்படும் என்பதை மனமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**குறைந்த கட்டணத்தில் தங்குமிடவசதி**

சேவை மனப்பாங்குடன் வெளியூர்களிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு வசதியாக குறைந்தகட்டணத்தில்தங்குவதற்குவசதிகள்செய்யப்பட்டுள்ளன. AC அறைகளும் உண்டு

**உங்கள் திருப்தியே எங்கள் சேவை**

**வீடியோ கலாமினி**

அச்சுவேலி

(508)

# அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டால் மக்கள் அச்சமடையத் தேவையில்லை

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

தேர்தலின் பின் நாட்டின் முக்கிய கேந்திர நிலையங்களை இராணுவ மயப்படுத்தி அதனை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதற்கான பின்னணி உருவாக்கப்பட்டு வருகிறது. இது நாடு இராணுவ மயமாவதற்கு ஒப்பானதாகும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்படும் பட்சத்தில் பொதுமக்கள் அச்சமோ அல்லது பதற்றமோ அடையத் தேவையில்லை. உங்களைப் பாதுகாப்பதற்காக நாம் உறுதுணையாக இருப்போம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் உத்தியோக பூர்வ அலுவலகத்தில் நேற்று முன்தினம் விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் மேலும் கூறுகையில்,

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்குத் தேர்தல் முடிவுகள் நிச்சயமாக தோல்வியையே தரப்போகின்றன. அவ்வாறான தோல்வி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள அரசாங்கம் ஆட்சியை நீடிப்பதற்குப் பலதரப்பட்ட சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் முக்கியமான, கேந்திர நிலையங்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் ஊடகங்களின் செயற்பாடுகளை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மொத்தத்தில் அரசாங்கம் இன்றைய அதிகாரத்தை தேர்தல் முடிந்ததன் பின்னரும் பலவந்தமாகவே வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் மக்கள் நிதானமாக செயற்படவேண்டும் என்றும் அச்சமோ பதற்றமோ கொள்ளத் தேவையில்லை எனவும் சுமுகமாகச் செயற்படுமாறும் கேட்டுக் கொள்கிறோம். அசாதாரண சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் இதுவரை காலம் எமது தலைமைத்துவம் எவ்வாறு அமையப் பெற்றிருந்ததோ அதேபோல் தொடர்ந்தும் செயற்படுவோம் என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த ஜெனரல் பொன்சேகாவின் பேச்சாளரான அனுரகுமார திசாநாயக்க எம்.பி. கூறுகையில்,

குருநாகலில் தேர்தல் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த வாகனம் கடற்படைக்குச் சொந்தமானதாகும். இந்த வாகனத்தின் சாரதி உட்பட கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களும் கடற்படையினர் ஆவர். அரசாங்கம் இவ்வாறுதான் இராணுவத்தினரை தனது தேர்தல் தேவைக்காகப் பயன்படுத்தி வருகின்றது. இது இவ்வாறிருக்க வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் வன்னி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரும் இடமாற்றப்பட்டுள்ளனர். இது அவசரமாக இடம்பெற்ற இடமாற்றங்களாகும். இவற்றை நோக்கும்போது தேர்தல் நடைபெறும் காலப் பகுதியில் அரசாங்கம் ஏதோ ஒரு வகையில் வன்முறைகளுக்கு ஆயத்தமாகி வருகின்றது என்பது புலனாகின்றது.

அரச ஊடகமான தேசிய ரூபவாஹினியின் ஊழியர்களுக்கு விடுமுறை கொடுக்குமாறு அதன் பணிப்பாளருக்கு உயர் மட்டத்திலிருந்து எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள் ளது. அதற்கான ஆதாரம் எம்மிடத்தில் இருக்கின்றது. அரசாங்கம் தனக்குச் சாதகமான அதிகாரிகளையும் மற்றும் ஊழியர்களையும் மாத்திரமே பணியில் ஈடுபடுத்திக் கொள்வதாக இருந்தால் இதற்கான அர்த்தம் என்ன என்பதை நாம் கேட்கவிரும்புகிறோம்.

அரசாங்கத்தின் வேட்பாளர் ஏன் இவ்வாறு தடுமாற்றம் அடையவேண்டும். மக்களின் தீர்ப்பை உதறித் தள்ளுவதற்கே அவர் தயாராகி வருகிறார். அதனாலேயே மிகைப் படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (2-6)

## சிலருக்கே அனுமதி

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினி மற்றும் ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் முன்பாக திடீரென வீதித் தடுப்புக்கள் போடப்பட்டு இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதோடு சேவையாற்ற குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே அனுமதி கிடைத்துள்ளது. இம்முடிவு ஏன்? எதற்கு என்ற சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என்று ஐ.தே.க. வின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (2-6)

## இடம்பெயர்ந்தோர் வாக்களிப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

### தேர்தல்கள் செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

மோதல் காரணமாக இடம்பெயர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் தற்காலிகமாக தங்கியுள்ள வடபகுதியை நிரந்தரமாகக் கொண்ட 45 ஆயிரத்து 730 பேருக்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

இவர்கள் வாக்களிப்பதற்கென 80 வாக்குச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளதாகவும் புத்தளம், கொழும்பு, கம்பஹா, மட்டக்களப்பு, குருநாகல், களுத்துறை, அனுராதபுரம், பொலனறுவை உள்ளிட்ட 10 மாவட்டங்களில் இடம்பெயர்ந்தவர்கள் தற்காலிகமாக தங்கியுள்ளனர் எனவும் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் புத்தளம் மாவட்டத்திலே அதிகமானவர்கள் தங்கியுள்ளதாகவும் அந்த மாவட்டத்தில் 21 ஆயிரத்து 734 பேர் தங்கியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த மக்களின் வாக்குகளை எண்ணி வாக்கு முடிவுகளை மாத்திரம் அவர்களின் சொந்த வதிவிடங்களின் தேர்தல் தொகுதி வாக்கு முடிவுகளுடன் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. (6-3)

## 40 வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் வருகை

(கொழும்பு)

இதில் இலங்கையில் நிரந்தரமாக இருக்கும் வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கும் மேலதிகமாக 40 செய்தியாளர்கள் வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரைம் பத்திரிகை உட்பட பல சர்வதேச பத்திரிகை செய்தியாளர்கள் ஜனாதிபதி தேர்தலின் பொருட்டு கொழும்பு வந்துள்ளனர்.

மேற்படி செய்தியாளர்கள் நாட்டின் வடக்கு கிழக்கிலுள்ள தேர்தல் மோசடிகள், வன்முறைகள் நிகழக்கூடிய தொகுதிகளில் கூடிய கவனம் செலுத்துவார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

## போகம்பரை சிறைச்சாலை இடமாற்றம்

(கொழும்பு)

போகம்பரை சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றத் தீர்மானம் எடுத்துள்ளதாக மத்திய மாகாண சபை ஆளுநர் திக்கிரி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தற்போதைய போகம்பரைச் சிறைச்சாலைக் கட்டடம் 100 வருடத்திற்கு மேல் கடந்து விட்டதாகவும் இன்றைய தேவைக்கு ஏற்றதாக கட்டடம் இல்லை எனவும் தெரிவித்தார். பல்லேகலையில் சிறைச்சாலைக்கான புதிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கவுள்ளதாகவும் இது 2011 ஆம் ஆண்டில் பூர்த்தியாகும் எனவும் தெரிவித்தார். (6-4)

## மின்னஞ்சல் பார்ப்பதில் 10 ஆண்டுகள் செலவிடப்படுகிறது

### வெளிநாட்டு ஆய்வின் மூலம் தகவல்

அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் மின்னஞ்சல் பார்க்கவும் அவற்றுக்குப் பதில் அனுப்பவும் தங்களது வாழ்நாளில் 10 ஆண்டுகள் வரை செலவிடுவதாக ஒரு ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

இன்றைய அவசர தேவைக்கு ஏற்ப கடிதப் போக்குவரத்து முறையும் இலத்திரனியல் மயமாகியுள்ளது. அதுதான் மின்னஞ்சல். ஆனால் சிலர் இதற்கு அடிமையாகியுள்ளனர்.

கடும் வேலை நெருக்கடிக்கு இடையிலும் அலுவலக ஊழியர்கள் 5 நிமிடத்துக்கு ஒரு முறை ஈமெயிலில் ஏதேனும் வந்துள்ளதா எனப் பார்ப்பதாக ஸ்கொட்லாந்தின் ஐ.டி. பயிற்சி நிறுவனமான இண்டிசியா டிரெய்னிங் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. மேலும் உடனே பதிலும் அனுப்புகின்றனர்.

இதனால் செய்யும் வேலை பாதிக்கப்படுகின்றது. இதற்காகவே ஒரு வாரத்துக்கு ஒரு ஊழியர் 8.5 மணி நேரம் செலவிடுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால் வாழ்நாளில் 9.7 ஆண்டுகள் வீணாகிறதாம்.

மேலும் புகை, மது, சூதாட்டம் போன்றது தான் இந்தப் பழக்கமும். இதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் என உளவியல் நிபுணர் டாக்டர் மைக்கேல் ரெட்டி தெரிவித்துள்ளார். (2-6)

## தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை 900ஆக உயர்வு

(கொழும்பு)

தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை 900 ஆக உயர்வடைந்துள்ளதென தேர்தல்களுக்கான காவல்துறைப் பிரிவின் பொறுப்பாளர் பிரதிக் காவல்துறைமா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பிரதான கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையிலான மோதல் சம்பவங்களே கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் எதிரணியின் தேர்தல் பிரசார சுவரொட்டிகள், பதாகைகளை அகற்றுதல் போன்ற நடவடிக்கைகளினால் அதிகளவான மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனைத் தடுக்க அசம்பாவிதங்கள் நிகழக்கூடிய இடங்களுக்குக் கூடுதலான காவல்துறை பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தேர்தல் கடமைகளுக்காக 68 ஆயிரத்து 800 காவல்துறை உத்தியோகத்தர்களும் தேவையேற்படும் பட்சத்தில் களமிறக்கும் வகையில் முப்படையினரும் தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட வேண்டாம் என சகல கட்சிகளிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## புங்குடுதீவில் மீள்குடியேறிய மக்களுக்கு ஜேர்மன் தொண்டு நிறுவனம் உதவி

கடந்த ஆறுமாத காலத்திற்குள் புங்குடுதீவில் மீள்குடியேறிய 300 குடும்பங்களுக்கு அவர்கள் தாம் வசித்த முந்தைய இருப்பிடங்களில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதென ஜேர்மன் தன்னார்வ தொண்டு நிறுவனமான ஆக்ரோ மார்ட் (Weltthungerhilfe) தெரிவித்துள்ளது.


230 குடும்பங்களுக்கு தத்தமது வீடுகளை, மலசல கூட வசதிகள் கட்டிக் கொள்வதற்கான பூரண உதவியும் 70 குடும்பங்களுக்கு பகுதியாக சேதமடைந்துள்ள வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கும் உதவிகள் வழங்கப்பட்டது எனவும் அது தெரிவித்துள்ளது.


வாழ்வாதார முயற்சிகளை செயற்படுத்துவதற்கு ஏதுவாக மேற்படி குடும்பங்களுக்கு கால்நடை வளர்ப்பு, கைப்பணி, மீன்பிடி, வியாபாரம் மற்றும் பல்வேறு முயற்சிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அந்நிறுவனம் அவர்களது முடிவுப் பொருட்களின் விநியோகம், விற்பனை போன்றவற்றிற்கும் உதவுவதாகத் தெரிவித்துள்ளது.

மேலதிகமாக மேற்படி 300 குடும்பங்களுக்கும் இடைத்தங்கல் முகாமிலுள்ள குடும்பங்களுக்கும் உணவுப் பொருட்கள் வழங்கி வருவதாகவும் அத்தன்னார்வ தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் மேற்குறிப்பிட்ட மீள்குடியேற்றப் பகுதிகளுக்கு விஜயம் செய்த இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் யேன்ஸ் பிளோட்டர் கூறுகையில்,

பல்வேறு இடர்களுக்கும் இழப்புக்களுக்கும் ஆளான இம்மக்களுக்கு உறைவிடம் முக்கிய தேவையான ஒன்று எனத் தெரிவித்துள்ளதுடன் அதை நிறைவு செய்ததில் ஜேர்மன் நாடு பங்கெடுத்துக் கொண்டதில் தான் மிக மகிழ்ச்சியடைந்ததாகவும் குறிப்பிட்டார். அடுத்து அவர்கள் தம் வாழ்வாதார முயற்சிகளுக்கு உதவுவது அவசர தேவையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (6)





புங்குடுதீவு ஸ்ரீகணேசா வித்தியாலய கால்கோள் விழாவில், தீவகம் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பாணிப்பாளர் வீ.தனிநாயகம் மாணவி ஒருவருக்கு பரிசு வழங்குவதையும், புதிய மாணவர்களுடன் விருந்தினர், அதிபர் எஸ்.கே. சண்முகலிங்கம் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.

# அடையாள அட்டை பத்திரம்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடையாள அட்டைகளைச் சேகரிப்போரைக் கைது செய்ய உதவுமாறு பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய வாக்காளர்களைக் கேட்டுள்ளார்.

வாக்காளர்களின் அடையாள அட்டைகளை சிலர் பறி முதல் செய்ய முயற்சிப்பது தொடர்பாக எழுப்பப்பட்ட ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த அவர், அடையாள அட்டைகளை எவரிடமும் கையளிக்க வேண்டாம் என்றும் அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் வாக்காளர்களைக் கேட்டுள்ளார். (2-6)

# ஆர்வமுடன் வாக்களிப்பில் திருகோணமலை மக்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் வாக்களிக்க மக்கள் ஆர்வமாகவுள்ளனர்.

இம்முறை இம்மாவட்டத்தில் 2இலட்சத்து 41ஆயிரத்து 133 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மூன்று தேர்தல் தொகுதிகளைக் கொண்ட இம்மாவட்டத்தில் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே அதிகமானோரா் வாக்களித்திருந்தனர்.

இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மூதூர் தொகுதி, திருகோணமலை தொகுதி, சேருவில தொகுதி என்பவற்றுக்கான வாக்களிப்பு நிலையங்கள் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

திருகோணலை மாவட்டத்தில் 3தேர்தல் தொகுதிகளுக்கும் 378 வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு அதற்கான இணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை 2இலட்சத்து 41 ஆயிரத்து 133 வாக்காளர்களுள் 23.01 வீதமானோர் தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்களாக உள்ளனர்.

கிண்ணியாவில் 36, 255 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 36 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# அமெ.விமானத் தகர்ப்பு முயற்சிக்கு பின்லேடன் பொறுப்பேற்றார்

## மேலும் தாக்குதல்கள் நடத்தப்போவதாக மிரட்டல்

(டுபாய்)

கடந்தமாதம் அமெரிக்காவில் தோல்வியில் முடிவடைந்த விமான தகர்ப்பபு முயற்சிக்கு பின்லேடன் பொறுப்பு ஏற்றார். அமெரிக்காவில் மேலும் பல தாக்குதல்கள் நடத்தப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 25 ஆம்திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று அமெரிக்காவில் டெட்ராய்ட் நகருக்குச் சென்ற விமானத்தை குண்டை வெடிக்கச் செய்து தகர்க்க முயற்சி நடந்தது.

நைஜீரியாவைச் சேர்ந்த அப்துல் முத்தலீப் தீவிரவாதி தன் தொண்டையில் மறைத்து வைத்து இந்தவெடிமருந்தை ஊசிமூலம் எடுத்து கலக்கச் செய்து அதன்மூலம் வெடிக்க வைக்க முயற்சி செய்தான். இந்த முயற்சி தோல்வியடைந்ததால் குண்டுவெடிக்கவில்லை. இதனால் விமானம் தப்பியது. அதில் பயணம் செய்த 300 பயணிகளும் தப்பினார்கள்.



விமானத்தை தகர்க்க முயன்றதாக அப்துல் முத்தலீப் கைது செய்யப்பட்டான். அவனிடம் நடந்த விசாரணையில் தான் அல்கொய்தா இயக்கத்தைச் சேர்ந்தவன் என்றும் ஏமன் நாட்டில் தீவிரவாதப் பயிற்சி பெற்றதாகவும் தெரிவித்தான்.

இந்நிலையில் இந்தத் தகர்ப்பு முயற்சிக்கு அல்காய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் பொறுப்பு ஏற்றுக்கொண்டார். அவரது பேச்சு பதிவு செய்யப்பட்ட ஒளிப்பதிவு நாடா அல்ஜசீரா தொலைக்காட்சி அலை வரிசையில் ஒளிபரப்பப்பட்டது. ஒசாமா விடமிருந்து அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு என்ற தலைப்பில் ஒலிபரப்பான அந்த ஒலிப்பதிவு நாடாவில் பின்லேடன் கூறியிருப்பதாவது, அப்துல் முத்தலீப் பயணம் செய்த விமானம் மூலமாக தங்களுக்கு ஒபாமா செய்தி அனுப்பியது நான் தான். அது, ஏற்கனவே 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்கா மீது விமானத்தாக்குதல் நடத்திய மாவீரர்கள் கொடுத்த செய்தி போன்றதுதான்.

வார்த்தைகள் மூலமாக எங்களது செய்தியை தங்களிடம் சேர்க்கமுடியாதிருந் தால் அரைத விமானம் மூலமாக அனுப்பியிருக்கமாட்டோம்.

பாலஸ்தீனத்தில் நாங்கள் அமைதியாக வாழும் நிலை ஏற்படும் வரை அமெரிக்கா தனது பாதுகாப்பைப் பற்றி கனவில் கூட நினைக்க முடியாது. காசா பகுதியில் எங்கள் சகோதரர்கள் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும்போது அமெரிக்கர்கள் அமைதியாக வாழ்வது சரியல்ல.

எனவே, இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் ஆதரவு நீடிக்கும்வரை, அமெரிக்காவில் இது போல மேலும் பல தாக்குதல்கள் நடத்தப்படும். இதுவே கடவுளின் விருப்பம். இவ்வாறு பின்லேடன் கூறியுள்ளார். (2-6)

# மத்திய அரசின் விளம்பரத்தில் பாகிஸ்தான் இராணுவ அதிகாரி

## இந்தியாவில் கடும் சர்ச்சை

மத்திய அரசு வெளியிட்ட விளம்பரத்தில் பாகிஸ்தான் விமானப்படை முன்னாள் தலைமை தளபதி தன்வீர் மஹ்மூத் அகமதுவின் படம் இடம்பெற்றது கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தவறுக்காக பிரதமர் அலுவலகம் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளது. இந்த தவறு எப்படி நடந்தது என்பதை விசாரிக்க உடனடியாக உத்தரவு பிறப்பித்துள்ளது.

தேசிய பெண் குழந்தை தினத்தை முன்னிட்டு மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் சார்பில் பத்திரிகைகளுக்கு விளம்பரம் அளிக்கப்பட்டது. அந்த விளம்பரம் நாடு முழுவதும் முன்னணிப் பத்திரிகைகளில் ஞாயிற்றுக்கிழமை வெளியானது.

பெண் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அந்த விளம்பரத்தில் வாசகங்கள் இடம்பெற்றுள்ளதுடன் அதில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, இந்திய கிரிக்கெட் அணிமுன்னாள் கப்டன் கபில்தேவ், கிரிக்கெட் வீரர் வீரேந்திர சேவாக், பிரபல சரோட் இசைக் கலைஞர் உஸ்தாத் அம்ஜத் அலிகான் ஆகியோரின் புகைப் படங்களும் இடம்பெற்றுள்ளன.

இவர்களுடன் சேர்த்து பாகிஸ்தான் விமானப் படை முன்னாள் தலைமை தளபதி தன்வீர் மஹ்மூத் அகமதுவின் படமும் இடம் பெற்றுள்ளது. இதுவே கடும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. மத்திய அரசின் அதிகாரப்பூர்வமான விளம்பரத்தில் மற்றொரு நாட்டு விமானப்படை அதிகாரியின் படம் இடம் பெற்றது எப்படி என்று நாடு முழுவதும் பல்வேறு தரப்பினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தற்போது அரசு விளம்பரத்தில் அயல் நாட்டு அதிகாரி ஒருவரின் படம் இடம்பெற்றது தவறு. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்பதை பிரதமர் அலுவலகம் ஒப்புக் கொண்டுள்ளது. அதற்காக மன்னிப்பும் கோரிவிட்டது.

ஆனால் அரசு விளம்பரத்தில் பாகிஸ்தான் நாட்டு அதிகாரி ஒருவரின் படம் இடம் பெற்றதில் தவறு ஒன்றுமில்லை என்ற வகையில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தை அமைச்சரகத்தின் இணை அமைச்சர் கிருஷ்ண தீரத்தின் கருத்து அமைந்துள்ளது.

விளம்பரம் வெளியானது குறித்து செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்த கிருஷ்ண தீரத், அரசு வெளியிட்டுள்ள விளம்பரத்தில் யார் யார் படங்கள் இடம்பெற்றுள்ளது என்பது அவ்வளவு முக்கியமில்லை, அதில் உள்ள வாசகங்கள் தான் முக்கியம்.

பெண்குழந்தைகள் காக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தும் வாசகம் விளம்பரத்தில் எவ்விதத் தவறும் இன்றி தெளிவாக இடம்பெற்றுள்ளது.

இது மக்களை சென்றடைந்து பெண் குழந்தைகளின் முக்கியத்து வம் குறித்து விழிப்புணர்வு ஏற்படவேண்டும். பெண்குழந்தைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே நமது நோக்கம் என்றார்.

மேலும் அரசு விளம்பரத்தில் பாகிஸ்தான் அதிகாரியின் புகைப்படம் எப்படி இடம்பெற்றது என்பது தெரியவில்லை. ஒருவேளை இந்திய விமானப்படை தலைமை தளபதி பி.வி. நாயக்கின் படத்தை வைக்க நினைத்து தவறுதலாகப் படத்தை வைத்துவிட்டார்களா என்பது தெரியவில்லை. எனினும், இதுகுறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தவறு எப்படி நடந்து என்பது விரைவில் தெரிய வரும் என்றும் கிருஷ்ண தீரத் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# இன்டர்நெட் மூலம் கிறிஸ்தவ மத பிரசாரம்

## பாதிரியார்களுக்கு போப் ஆண்டவர் அறிவுறுத்தல்

(வாடிகன்)

ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் உலக தகவல் தொடர்பு நாள் கடைப் பிடிக்கப்பட்டது. இது குறித்து போப் ஆண்டவர் 16ஆவது பெனடிக்ட் (82) கிறிஸ்தவ பாதிரியார்களுக்கு ஒரு செய்தி அனுப்பியுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது,

தற்போது கம்ப்யூட்டர் மற்றும் இன்டர்நெட் துறை அபார வளர்ச்சி அடைந்துள்ளது. இதில் பல புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அவற்றைப் பயன்படுத்தி கிறிஸ்தவ நற்செய்திகளை ஆடியோ மற்றும் வீடியோ மூலமும், அனிமேஷன்கள் மற்றும் இணையத் தளம் மூலமும் பிரசாரம் செய்யுங்கள். மக்களை சென்றடையும் விதத்தில் கவனத்தை ஈர்க்கக் கூடிய வகையில் வாசகங்கள் அமைக்கப்படவேண்டும்.

தற்போதுள்ள கலாசார மாற்றத்துக்கு தக்கபடி இளைஞர்களின் கவனத்தைக் கவரும் விதத்தில் கிறிஸ்தவ மதக் கொள்கைகளைப் பரப்பவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (6)

## புகை, நச்சுவாயு வெளியேற்றும்

# ஐ.நாவின் கெடுவை நிராகரித்தார் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்

(புதுடில்லி)

பருவநிலை மாற்றத்தை சமாளிக்க புகை மற்றும் நச்சுவாயு வெளியேற்றம் குறைக்கப்படும் அளவை ஜனவரி 31க்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்று ஐ.நா. சபை விதித்த கெடுவை பிரதமர் மன்மோகன்சிங் நிராகரித்துள்ளார். உலகம் முழுவதும் புகை மற்றும் நச்சுவாயு வெளியேற்றம் அதிகரித்திருப்பதால் வளிமண்டலம் பாதிக்கப்பட்டு சூரியனின் வெப்பம் புவியை அதிகமாக தாக்குகிறது. இதனால் பனிமலைகள் உருகி பருவநிலையில் மாற்றம் ஏற்படுகிறது.

இதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் ஒவ்வொரு நாடும் புகை மற்றும் நச்சுவாயு வெளியேற்றத்தைக் குறைக்கவேண்டும். இது பற்றி ஆலோசிப்பதற்காக கடந்த ஆண்டு டிசம்பரில் டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் நடந்த மாநாட்டில் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. எனினும் ஒவ்வொரு நாடும் 2020 ஆம் ஆண்டுக்குள் குறிப்பிட்ட அளவுக்கு புகை வெளியேற்றத்தை குறைக்க வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீமூன், டென்மார்க் பிரதமர் லார்ஸ் லாக்கிரஸ் முஸ்சின் ஆகியோர் கூட்டாக பிரதமர் மன்மோகன்சிங்குக்கு எழுதியுள்ள



கடிதத்தில் 2020க்குள் புகை வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக இந்தியா நிர்ணயித்துள்ள குறியீட்டை ஜனவரி 31 ஆம் திகதிக்குள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டிருந்தனர். இந்தக் கெடுவை பிரதமர் மன்மோகன் சிங் நிராகரித்துவிட்டார். இதுகுறித்து பிரதமர் அலுவலக வட்டாரம் கூறியதாவது,

ஐ.நா. பொதுச் செயலாளரும், டென்மார்க் பிரதமரும் விதித்துள்ள கெடுவால் பிரதமர் அதிருப்தி அடைந்துள்ளார். கியோட்டோ உடன்பாடுபற்றி எதுவும் குறிப்பிடாத நிலையில் டென்மார்க் மாநாட்டில் ஏற்பட்ட ஒப்பந்தம் கேள்விக்குறியாக இருக்கிறது. இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இந்தியாவின் திட்டம் என்ன என்பதை விளக்க முடியாது.

ஒருமித்த கருத்து ஏற்படாத நிலையில் கோபன்ஹேகன் மாநாட்டுத் தீர்மானத்தை நாடுகள் தாமாக முன்வந்து தான் ஏற்க வேண்டும். கட்டாயப்படுத்த முடியாது. இவ்வாறு பிரதமர் அலுவலக வட்டாரம் தெரிவித்தது. (2-6)

# இந்திய குடியரசு தினவிழாவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

(புதுடில்லி)

இந்தியாவின் 61 ஆவது குடியரசு தின விழா நாடெங்கும் இன்று கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி தலைநகர் டில்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடியரசு தின விழாக் கொண்டாட்டங்களை சீர்குலைக்க பல வெடிபொருட்களுடன் தீவிரவாதிகள் காஷ்மீருக்குள் ஊடுருவி இருப்பது நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து நாடெங்கும் உள்ள விமான நிலையங்களில் 7 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் லஷ்கர் -இ-தொய்பா தீவிரவாதிகள் 50 பரசூட்கள் மூலம் குதித்து டெல்லியில் நாசவேலை செய்யத் தயாராகி வருவதாக தெரியவந்தது. குடியரசு தின அணிவகுப்புக்கு ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கும் போதோ அல்லது குடியரசு தின விழா ஏற்பாடுகள் செய்பவர்கள் மீதோ பரசூட்டில் வரும் தற்கொலைப்படை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்றும் தெரியவந்தது.

இந்த தீவிரவாதிகள் டெல்லி நகருக்குள் குதித்து விடாமல் தடுப்பதற்காக எல்லா முன் எச்சரிக்கை ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. டில்லி புறநகர்ப் பகுதிகளிலும், ஜனாதிபதி, பிரதமர் இல்லம் அருகிலும் விமான எதிர்ப்பு ஊடுருவும் விமானம் மற்றும் ஹெலிகொப்டர்களை சுட்டுத்தள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

குடியரசுத்தின விழா அணிவகுப்பு நடைபெறும் பாதை முழுவதும் சுமார் 15 ஆயிரம் இராணுவ வீரர்கள் காவல் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். இந்த வழி முழுவதும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் வைக்கப்பட்டுள்ளன.

இன்று காலையில் டில்லி நகரம் மீது இராணுவ விமானங்களும், ஹெலிகொப்டர்களும் வட்டமிட்டபடி கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளன. இதுதவிர ரயில் நிலையங்கள், மேம்பாலங்கள், மத்திய அரசு அலுவலகங்களில் கமாண்டோ படைவீரர்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர். பாதுகாப்பு படைவீரர்கள் அனைவருக்கும் வயர்லஸ் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாதுகாப்புப் படைவீரர்கள் அனைவரும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் நடமாட்டத்தைக் கண்காணிக்க அணிவகுப்பு பாதை முழுவதும் 100 க்கும் மேற்பட்ட இரகசிய கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.


அணிவகுப்பை காண மக்கள் பகுதிகளில் 3 அடுக்கு பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டில்லியின் அனைத்து முக்கிய சந்திகளிலும் நான்கு குறிபார்த்து சுடும் வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

டில்லி நகர் முழுவதும் பாதுகாப்புப் படையினர் வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## பாரதச் செய்திகள்

# என்றும் தி.மு.க.வின் தோழமைகட்சி பாட்டாளி மக்கள் கட்சிதான்

## டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு



(சென்னை)

தி.மு.க அரசுக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்போம் என்று பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்தார். இது குறித்து அவர் சென்னையில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது,

2006 ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலுக்குப் பின் தனிப் பெரும்பான்மை இல்லாத தி.மு.க. ஆட்சி அமைக்க பாட்டாளி மக்கள்கட்சி நிபந்தனையற்ற ஆதரவு அளித்தது.

அதற்கான கடிதத்தை ஆளுநரிடம் அளித்த முதல் தோழமைக் கட்சி பா. ம.கட்சி தான். அந்த ஆதரவு இப்போதும் தொடர் கிறது. நாளைக்கே தி.மு.க. அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் கூட எமது-கட்சி நிச்சயம் அரசை ஆதரிக்கும். 2006 ஆம் ஆண்டு நாங்கள் எடுத்த முடிவில் இப்போதும் உறுதியாக உள்ளோம்.

ஆனால் பா.ம.க.விடம் உள்ள இத் தகைய தோழமை உணர்வு தி.மு.க.விடம் இல்லை. கடந்த உள்ளாட்சித் தேர்தலின் போது தோழமைக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட ஒன்றியக் குழுத் தலைவர் நகர், மன்றத் தலைவர் போன்ற பதவிகளுக்கு அக்கட்சிகளின் சார்பில் ஒருவர் வெற்றி பெற்றாலும் கூட மற்ற கட்சிகள் ஆதரிக்க வேண்டும் என்பதே உடன்பாடு.

அந்தவகையில் தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள், சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டினம் ஆகிய ஒன்றியங்களில் பா.ம.க.வைச் சேர்ந்தவர்கள் ஒன்றியக் குழுத் தலைவர்களாக செயல்பட்டு வந்தனர்.

ஆனால் இப்போது தி.மு.க. வினர் பா.ம.க. தலைவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து தோற்கடித்துள்ளனர். தி.மு.க.தலைமை இதனைக் கண்டு கொள்ளவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# நாராயணன் நியமனம் மார்க்சிஸ்ட் அதிருப்தி



மேற்கு வங்க மாநில புதிய ஆளுநர் நியமனம் தொடர்பாக அம் மாநிலத்தில் ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதிருப்தியில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்கு வங்க மாநிலம் புதிய ஆளுநராக முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே.நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனம் தொடர்பாக மாநிலத்தில் ஆளும் மார்க்சிஸ்ட் கட்சியினர் இடையே அதிருப்தி நிலவுகிறது.

இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வட்டாரங்கள் கூறியதாவது,

மேற்கு வங்க முதல்வர் புத்த தேவ் பட்டாச்சார்யா மாநில ஆளுநர் நியமனம் தொடர்பாக உள்துறை அமைச்சர் ப. சிதம்பரத்திடம் சில பெயர்களை பரிந்துரை செய்திருந்தார். அவரும் முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவை கலந்தாலோசிக்காமல் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படாது என உறுதியளித்திருந்தார். ஆனால் மத்திய அரசு மேற்கு வங்க முதல்வருக்கு அளித்த உறுதிமொழியை மீறிவிட்டது. ஆளுநரை அறிவிக்கும் முன் மாநில அரசை கலந்தாலோசிக்கவில்லை. இவ்வாறு அவர்கள் கூறினார்.

தேர்தல் நேரத்தில் ஆளுநரின் பங்கு மிக முக்கியமானது. எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு மாநிலத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் நாராயணன் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இது காங்கிரசின் கூட்டணி கட்சியான திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி நீண்டகாலமாக கோரி வருவதைப் போல மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்ப்படுத்த நாராயணனை பயன்படுத்தும் திட்டமாக இருக்கலாம் என இடதுசாரி தலைவர்கள் அஞ்சுகின்றனர். (6)

# இந்திய சினிமா, டி.வி நிகழ்ச்சிகளுக்கு பாகிஸ்தானில் தடை விதிப்பு

3ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் விளையாட பாகிஸ்தான் வீரர்கள் முன்வந்தனர். ஆனால் அவர்களை ஏலம்விட்ட போது எந்த அணியும் அவர்களை ஏலம் எடுக்க முன்வரவில்லை. அணிகள் திட்டமிட்டே பாகிஸ்தான் வீரர் களை ஏலம் எடுக்காமல் அவமதித்து விட்ட தாக பாகிஸ்தான் தரப்பில் குற்றஞ்சாட்டப் படுகிறது.


இது தொடர்பாக பாகிஸ்தான் பாராளுமன்றத்திலும் விவாதம் நடந்தது. அப்போது பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் பாகிஸ்தான் வீரர்களை அவமதித்ததற்காக இந்தியாவுக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள்.

இதையடுத்து பாகிஸ்தான் இந்திய டி.வி. ஒளிபரப்பு மற்றும் சினிமாக்களை திரையிடுவதற்கு தடைவிதிக்க திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய முதலாவதாக ஐ.பி. எல். போட்டியை பாகிஸ்தானில் ஒளிபரப்ப தடை விதிக்கவுள்ளனர். அடுத்து இந்தியாவின் அனைத்து டி.வி.நிகழ்ச்சிகளுக்கும் தடை விதிக்கவுள்ளனர்.

பாகிஸ்தானில் இந்தி சினிமாக்கள் நன்றாக ஓடுவது வழக்கம். இதன்மூலம் இந்திய தயாரிப்பாளர்களுக்கு அதிக வருமானம் கிடைத்தது. எனவே இந்த வருமானத்தை தடுக்கும் வகையில் இந்திய சினிமாவை திரையிடவும் தடைவிதிக்கவுள்ளனர்.

இதுபற்றி பாகிஸ்தான் பாராளுமன்றத் தகவல் தொடர்பு செயலாளர் அசீம் கூறும் போது, இந்திய டி.வி. சினிமாவுக்கு தடை விதிப்பது குறித்து பரிசீலனை நடந்து வ்ருகிறது. விரைவில் இந்த முடிவு எடுக்கப்படும் என்றார். (2-6)



கடற்படை தினத்தையொட்டி, சென்னையில் இந்திய கடற்படையின் கிழக்கு கடற் கரை பிரிவு சார்பில் சாகச நிகழ்ச்சிகள் நடந்தது. இதில் எதிரிகளைக் குறிவைத்துத் தாக்கும் " ஆர்.பி.யு., 6000 " ஏவுகணை கடற்படை கப்பலில் இருந்து தீப்பிழம்புடன் வெளிவருகிறது.

# இலங்கை அகதிகளுக்கான தீர்வு காணப்படவேண்டும்

இந்தோனேசியாவின் மெராக் துறை முகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்குத் தீர்வு ஒன்று காண்பதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் உதவி வழங்க வேண்டுமென இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் மாட்டின் நட்டேன் அகவா கேட்டுள்ளார்.

துறைமுகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் தீர்வில் அவுஸ்திரேலியா பெரும் பங்காற்ற வேண்டும். இதற்கு அவுஸ்திரேலியா காலம் தாழ்த்தாமல் செயற்படவேண்டும்.

மேலும் இலங்கை அகதிகளை அவர்களின் நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் எண்ணம் இல்லையெனவும் ஆனால் இறுதி நிலையில் இதனைத் தவிர தமக்கு வேறு வழியில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். (2-6)

# இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திருமலை – மட்டக்களப்புக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்த இரு நாள் பயணமாக திருமலைக்கும் மட்டக்களப்புக்கும் பயணங்களை மேற்கொண்டிருந்ததாக இந்தியத் தூதரக செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கடந்த 20 மற்றும் 21ஆம் திகதிகளில் திருமலைக்கும் மட்டக்களப்புக்கும் விஜயம் மெற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின்போது அவர் கிழக்கு மாகாண ஆளுநர் றியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரமா, கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான், மட்டக்களப்பு நகர மேயர் சிவகீதா பிரபாகரன் உட்பட பலரைச் சந்தித்து கலந்துரையாடி யிருந்தார்.

அத்துடன் புளியங்குளம் மற்றும் கல்லடிப் பகுதிகளில் இரு இலத்திரனியில் அறிவுக் கூடங்களையும் அவர் திறந்து வைத்துள்ளார். இந்தியாவின் உதவியுடன் அங்கு இவ்வாறான 20 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மேலும் கிழக்கு மாகாணத்தின் போக்குவரத்து துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் 5 பேரூந்துகளையும் ஐந்து தொடரூந்து பெட்டிகளையும் வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# இந்தியத் தூதரகத்துக்கு வெடிகுண்டுப் பொதி

இத்தாலி நாட்டிலுள்ள இந்தியத் தூதரக அலுவலகத்துக்குத் தபாலில் வெடிகுண்டுப் பொதி ஒன்று வந்தது. விடுதலைப்புலிகளின் பெயரில் அந்தப் பொதி அனுப்பப்பட்டிருந்தது. அதில் இரண்டு பியூஸ் வயர்களும் வெடிப்பொருளும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி பொலிசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வந்து விசாரணை நடத்தினார்கள். இந்தத் தகவலை இத்தாலி தூதர் ஆரிப் கான் தெரிவித்தார். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்தியத் தூதரகத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்ப தாகவும் அவர் கூறியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# தேர்தலின் பின் ஏழு நாட்களுக்கு ஊர்வலங்கள், கூட்டங்களுக்குத் தடை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து ஏழு நாட்களுக்கு ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தடையை மீறுவோரை அந்தத் தருணத்திலேயே தேர்தல் சட்டத்தின் பிரகாரம் கைது செய்ய முடியுமெனத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார். இதற்கமைய இன்றைய தினத்தில் வாக்களிப்பு நிலையத்திற்கு 500 மீற்றர் தூரத்திற்குள் ஒன்றுகூடுதல், வாக்காளர்களுக்கு அழுத்தம் விடுத்தல் ஆகிய செயல்களில் ஈடுபடும் நபர்களை உடன் கைது செய்யுமாறும் பொலிஸ் ரோந்துப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (2-6)

# வவுனியாவில் குடியேறியுள்ள மாணவர்களின் கல்வி நிலை

நலன்புரி நிலையங்களிலிருந்து தற்காலிகமாக வவுனியாவில் குடியேறிய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பலத்த சிரமங்களை எதிர்கொள்வதாக வவுனியாவில் குடியேறியுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி இடர்நிலைக்குப் பல காரணங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மாலை வேளைகளில் இரண்டு மணி தொடக்கம் ஐந்து மணி வரையான குறுகிய நேரமே அவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் நடைபெறுவதாகவும் இதற்காக மாணவர்களுக்கு பாடநூல்கள், சீருடைகள், கற்றல் உபகரணங்கள் முழுமையாக வழங்கப்படவில்லையென்றும் அத்துடன் இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான கற்றல் உபகரணங்களும் முழுமையாக வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வவுனியாவில் பரவியுள்ள தீவிர டெங்கு நோய் காரணமாக தனியார் கல்வி நிலையங்கள் எல்லாம் மாலை 4 மணி வரையுமே நடாத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இடம்பெயர்ந்த இந்த மாணவர்கள் மாலையில் பாடசாலையில் நிற்க வேண்டியுள்ளது என்றும் விசனம் தெரிவித்துள்ளனர். (2)

# டெங்கு நோயாளர் அதிகரிப்பு

டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அங்கு விடுதிகளில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமையால் நோயாளிகள் தங்க இடமின்றி நோயாளர் விடுதிகளின் தரையிலும் மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் பாய் விரித்துத் தங்கியுள்ளனர்.

இவ்வாறு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பின் காரணமாக அவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதையும் காணக்கூடியதாகவுள்ளது. மேலும் டெங்கு நோயின் தாக்கத்தினால் குழந்தைகளே பெரிதும் பாதிப்படைந்தவர்களாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-30)

# கிறிஸ்மஸ்தீவில் இலங்கை அகதிகள்

இலங்கை நாட்டவர்கள் உட்பட வெளிநாட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ்தீவுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை அறியவுள்ளதாக அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியின் குடிவரவுத்துறைப் பேச்சாளர் மொல்பன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது எல்லைப் பகுதியைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் தோல்வி கண்டநிலையில் அதன் நிலைமைகளையும், தன்மைகளையும் பார்வையிட அங்கு நாம் விஜயம் செய்கிறோம். எண்ணூறு பேர் தங்க வைப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த முகாமில் தற்போது ஆயிரத்து எண்ணூருக்கும் அதிகமானோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இடநெருக்கடியில் வாழும் இவ் அகதிகளுக்கு இடையில் மோதல் சம்பவங்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாது. இந்த நிலையில் இது தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள இயலாது என்றார். மேலும் சட்ட விரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குள் செல்ல முயன்ற வேளையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் அரசியல் புகலிடம் கோரியமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# 2 மாதத்தில் இரணைமடு குடிநீர் விநியோகத் திட்டம்

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

இரணைமடு குடிநீர் விநியோகத் திட்டத்தை மேலும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்க எண்ணியுள்ளதாக நீர் வழங்கல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிக்கின்றார்.

இதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இத்திட்டத்திற்காக ஏழாயிரத்து 100 மில்லியன் ரூபா செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் முழு யாழ். குடாநாட்டிற்கும் பயனளிக்கும் வகையில் இரணைமடு குடிநீர் திட்டம் அமையவுள்ளதுடன் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் அரசாங்கத்தினதும் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் இரணைமடு குடிநீர்த் திட்டம் யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் குடிநீர்ப் பிரச்சினைகளுக்குச் சிறந்த தீர்வாக அமையும் எனவும் அமைச்சர் மேலும் கூறினார். (2-6)

# தேவையான அளவு அரிசியை அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளது

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

அரிசித் தட்டுப்பாடு எதுவும் நாட்டில் தற்பொழுது இல்லை. போதுமான அளவு அரிசியை அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளது. இதனால் 2012ஆம் ஆண்டு வரை அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்று வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள *வைட்லோங்ஸ்ரேயின்* என்றழைக்கப்படுகின்ற இந்த அரிசி வகை கடந்த காலங்களில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் 75 ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்தது. தற்பொழுது சகல கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களிலும் 69 ரூபா 50 சதத்திற்கு இந்த அரிசியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அரிசித் தட்டுப்பாடு நிலவுவதாக கடந்த காலங்களில் பரவலாகப் பேசப்பட்டது. எனவே அதனை நிவர்த்தி செய்யும் முகமாக நுகர்வோருக்கு அரிசியைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

ஆகையினாலேயே பாகிஸ்தானிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தோம். இவ்வாறு இறக்குமதி செய்துள்ள வைட்லோங்ஸ்ரேயின் என்றழைக்கப்படுகின்ற தரம் வாய்ந்த இந்த அரிசியில் 5 வீதமே குறுநெல் அடங்கியுள்ளதுடன் கற்கள் நெல்லற்ற சுத்தமான அரிசியுமாகும். இந்த அரிசியைத் தனியார் துறையினர் வேண்டுமானாலும் எம்மிடம் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.



அவ்வாறு மொத்தமாகப் பெற்றுக் கொள்வதனால் ஒரு கிலோ அரிசியை 65 ரூபாவுக்கு வழங்க முடியும்.

தனியார் துறையினர் வெவ்வேறு மட்டங்களில் பல வகையான அரிசிகளை இறக்குமதி செய்து விற்பனை செய்து வருகின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாட்டில் தட்டுப்பாடு ஒன்று ஏற் படும்போது அதற்கான மாற்று நடவடிக்கைகளை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதனையே நாம் தற்போது செய்துள்ளோம்.

நுகர்வோரைப் பாதுகாக்கும் விதத்தில் நாம் பல்வேறு நவடிக்கைகளை கடந்த காலங்களில் ஆரம்பித்தோம். அந்த வகையில் பல்வேறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை பாரிய அளவில் குறைத்தோம்.

இந்த அரிசி கிலோ ஒன்றை 69 ரூபாய் 50 சதத்திற்கு பெற்றுக்கொள்ளும் அதே வேளை வெள்ளைப் பச்சை அரிசி ஒரு கிலோவை 50 ரூபாவுக்கும் பெற்றுக்கொள்ளலாம். கடந்த ஜுன் மாதம் 28.2 வீதமாக இருந்த அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பானது தற்பொழுது ஒற்றை இலக்கத்திற்கு வந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# மூட்டுவலிக்கான புதிய சிகிச்சை முறை பாதிப்பற்ற முறையில் எளிதில் நிவாரணம்

மூட்டுவலி என்பது முழங்கால் மூட்டு வலி மட்டும் தான் என்று நினைக்கக்கூடாது. உடலில் ஒவ்வொரு எலும்பு இணைப்பிலும் ஏற்படும் தேய்மானங்களும் மூட்டு பாதிப்பு தான்.

முழங்கால் , முழங்கை , கணுக்கால் , இடுப்பு மட்டுமல்லாமல், தோள்பட்டை யிலும் மூட்டு தேய்மானம் ஏற்படும் வயதானவர்களுக்கு , சில நோய்களால் பாதிக்கப்படுவோருக்கு இது நிச்சயம் ஏற்படும் விபத்து பாதிப்பாலும் ஏற்படும்.

தோள் பட்டை பாதிப்பு பல வகையில் பல வயதினருக்கு ஏற்படுவதுண்டு இதில் முக்கியமானது உறைந்த தோள்பட்டை மற்றும் தோள்பட்டை தேய்மானம் .

தோள்பட்டை மூட்டு தேய்மானம், பெரும்பாலும் வயதானவர்களுக்கு தான் ஏற்படும். ஆனால் முழங்கால் மூட்டு , இடுப்பு மூட்டு தேய்மானம் போல இதுவும் அவர்களுக்கு சாதாரணமாக வரக்கூடியது தான். விபத்து போன்ற சூழ்நிலையால் இளம் வயதினருக்கு ஏற்படும்.

இதை சரி செய்ய தோள்பட்டை மாற்று அறுவை சிகிச்சை செய்வது தான் இப்போது பழக்கத்தில் உள்ளது. வழக்கமாக செய்யப்படும் தோள்பட்டை மாற்று அறுவை சிகிச்சையில் பாதிப்பு இருக்கும். தோள் குருத்தெலும்புகளை மீண்டும் வளரச் செய்வதை புதிய முறை மூலம் எளிதில் செய்யலாம்.

இது இளம் தலைமுறையினருக்கு பெரிதும் பயனளிக்கக்கூடியது. வெளி நாடுகளில் செய்யப்படும் இந்த நவீன அறுவைச் சிகிச்சை இப்போது இந்தியாவில் அறிமுகமாகி வருகிறது.

**குருத்தெலும்பு வளரும்**

தோள்பட்டை தேய்மானத்தை சரி செய்ய நவீன முறையில் மெட்டல் கப் பொருத்தப்படுகிறது. தோள் பட்டையில் அது நீண்ட நாள் பாதுகாப்பு அளிப்பது மட்டுமல்ல குருத்தெலும்புகள் வளரவும் வழி வகுக்கிறது. குருத்தெலும்புகள் வளர்ந்து தோள்பட்டை பழைய படி ஆகி விட்டால் மெட்டல் கப்பை நீக்கி விடலாம்.

இது மெட்டல் கப் எந்த வகையிலும் பக்க விளைவுகளை ஏற்படுத்தாது. மாறாக எலும்புகளையும் தசை நார்களையும் வளர அனுமதிக்கிறது. இதன் மூலம் சில மாதங்களுக்குப் பின் இயல்பான தோள் பட்டை மீண்டும் உயிர் பெற்று விடுகிறது என்று எலும்பியல் நிபுணர் டாக்டர் வெங்டாசலம் கூறியுள்ளார்.


**உறைந்த தோள்**

தோள் பாதிப்பு என்றாலே பல பேருக்கு உறைந்த தோள்பட்டை பாதிப்பு தான் வரும். தோள்பட்டை உறைவது என்றால் ஏதோ உறைந்து போய்விடும் என்று எண்ண வேண்டாம். தோள்பட்டை இறுக்கமாகி எந்த வகையிலும் தூக்க முடியாமல் பயன்படுத்த முடியாமல் போகும். அதற்குப் பெயர் தான் உறைந்த தோள்பட்டை என்பது.

விபத்து போன்ற காரணங்களாலும் ஏற்படும் .சிலருக்கு ஓசைப்படாமல் படிப்படியாக கூட ஏற்படும். நாற்பது வயதில் இருந்து 65 வயதுள்ளவர்களுக்கு வரும். வீக்கத்தில் ஆரம்பித்து கையைத் தூக்க முடியாமல் போகும்.

**சர்க்கரை நோயாளிகளுக்கு**

சர்க்கரை நோயாளிகளுக்கு கண் பார்வை பாதிப்பு போன்றவை தான் ஏற் படும் என்றில்லை. தோள்பட்டை உறைவது ஏற்படும் எனினும் மிகவும் மோசமாக உள்ள நோயாளிகளில் 20 சதவீதம் பேருக்கு இந்த நிலை ஏற்படும். மாதக்கணக்கில் உறைந்த தோள் பாதிப்பு இருக்கும். வழியில் ஆரம்பித்து போகப் போக தோலை நகர்த்த முடியாமல் போகும். எக்ஸ்ரேயில் தெரிந்து விடும் என்றாலும் பலருக்கும் முற்றிய நிலையில் தான் அது உணர முடிகிறது.



இந்த பாதிப்பு 8 மாதம் வரை தொடரும். அப்போது அதிக வலி தெரியும். சாதாரண பாதிப்பு தான் என்று நினைத்து அதையும் உணராமல் இருந்து விட்டால் பாதிப்பு அதிகமாக இருக்கும்.

**சிகிச்சை முறை**

சாதாரணமாக பாதிப்புள்ளவர்களுக்கு மருந்து சாப்பிட்டு வந்தால் போதும். அத்துடன் பிசியோதெரப்பி செய்ய வேண்டும். அப்படிச் செய்து வந்தால் நிச்சயமாக பாதிப்பு நீங்கும் பல மாதங்களுக்கு இப்படி சிசிக்சை முறை தொடர வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் மீண்டும். பாதிப்பு வரத்தான் செய்யும். அதிக பாதிப்பு இருந்தால் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி வரும். அப்போது பாதிக்கப் பட்ட குருத்தெலும்புப் பகுதி நீக்கப்பட்டு சரி செய்யப்படும். இதற்கு ஆர்த்ரோஸ்கோபிக் அறுவைச் சிகிச்சை முறையில் அறுவைச் சிகிச்சை செய்யப் படும். சிறிய துளையிட்டு குழாய் செதுக்கப் படும். அதில் பொருத்தப் பட்ட கமராவில் பார்த்தபடி சிகிச்சை செய்யப்படும்.




# ஈறுகளில் ஏற்படும் இரத்தக் கசிவு

பல்வலி , பல்சொத்தை, பல்லைப் பிடுங்கிடுங்குதல் போன்ற பிரச்சினைகளைத் தான் முக்கியமாக முக்கியமாக கவனிக்கிறோம்.

பற்களை தாங்கி பாதுகாக்கும் ஈறுகளைக் கவனிப்பதில்லை. ஈறுகளில் இரத்தம் வடிவது ஒரு முக்கிய பிரச்சினையாகும்.



முறையாக பல்துலக்காமல் இருப்பது தான் இதற்குக் காரணம். நாம் சாப்பிடும் உணவின் துணுக்குகள் பல்லின் அடியில் ஈறுகளின் விளிம்பில் படிந்து அகற்றப்படாத போது ஈறுகள் சிவந்து வீக்கம் ஏற்பட்டு பாதிப்புக்குள்ளாகிறது.

பின்னர் கறை பிடித்து ஈறுபகுதியில் இரத்தம் வடியச் செய்கிறது. இன்னும் நாட்பட்ட நிலையில் தாடை எலும்பு நோய்க்கும் வழி கோலுகின்றது. இறுதியில் பற்களை இழக்க நேரிடலாம்.

ஈறுகளில் இரத்தம் கசிவதற்கான காரணங்கள் முறையாக பல் துலக்காதது , கர்ப்பகாலத்தில் ஓர்மோன் மாற்றங்கள் , சீரற்ற பல் வரிசை, முறையாக வாய் கொப்பளிக்காதது, இரத்தப் புற்றுநோய் போன்ற பிரச்சினைகள் காரணமாக ஈறுகளில் இரத்தம் கசியும் பிரச்சினை ஏற்படக்கூடும்.

ஈறுகளில் இரத்தம் வடிதல் என்பது மொத்த பல் அமைப்பையே சீர்குலைக்கும் செயலின் ஆரம்பம் வாயில் உள்ள பற்றீரியாக்கள் முதலில் ஈறுகள்ள வீங்கச் செய்து பற்களைக் தாங்கிப்பிடிக்கும் திசுக்களைச் சிதைக்கின்றன.

பின்னர் இவை பற்கறைகளாக மாறி ஈறுகளில் அரிப்பை உண்டாக்கி இரத்தம் கசியச் செய்கிறது. கவனிக்கப்படாமல் விடும் இந்த நிலை தான் பின்னர் தாடை எலும்பு நோய்க்கு காரணமாகிறது. பல்லை இழக்கும் நோய்க்கும் காரணமாகிறது. பல்லை இழக்கும் நிலையும் ஏற்படுகிறது.

***சிகிச்சை***


ஈறுகளில் இரத்தக் கசிவை நிறுத்த மேற்கொள்ளும் முதல் சிகிச்சை ஸ்கேலின் எனப்படும். இது பல் இடுக்குகளில் சிக்கியுள்ள உணவுத்துணுக்குகளையும் வாயின் உள்ள பற்றீரியாக்களையும் அகற்ற பல் சிகிச்சை நிபுணர் மேற்கொள்ளும் சிகிச்சையாகும்.

இதற்குப் பிறகும் இரத்தம் கசிவது நிற்கவில்லை என்றால் தீவிர மருத்துவ மற்றும் பல் சிகிச்சை முறைகளை மேற்கொண்டு காரணங்களை ஆராய்ந்து சிகிச்சை பெற வேண்டும்.

# கணனியிலிருந்து கண்களை பாதுகாக்க....

கணனியில் நீண்ட நேரம் வேலை செய்பவர்களுக்கு கண்கள் உலர்ந்து பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு விடுகிறது.

அதாவது கணினியில் வேலை செய்யும் போது கண் இமைகள் இமைப்பது குறைந்து



விடுகிறது. இதனால் கண் வரண்டு போகிறது இதனைத் தவிர்க்க ஒரு மணிக்கொரு முறை கண்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்.

அந்த சமயத்தில் கண்களை உள்ளங்கையின் அடிப்பாகத்தால் லேசாக அழுத்தி விட வேண்டும். மற்றும் பச்சை அல்லது நீல நிறத்தில் உள்ள பொருட்களை சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருக்கலாம். இந்த நிறங்கள் கண்களுக்கு இதமானவை.

2 மணி நேரத்திற்கு ஒருமுறை கண்களை சுழர விட வேண்டும். அவ்வப் போது கண் இமைக்கப்படுகின்றதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதிக நேரம் கணனியில் வேலை செய்ய வேண்டிய வந்தால் அவ்வப்போது எழுந்து பச்சையாக மரங்களை பார்த்து விட்டு வந்து அமர்ந்து பணியாற்றலாம்.

# விக்கல் ஏன் ஏற்படுகின்றது

வயிற்றையும் ,மார்புப் பகுதியையும், டயபரம் என்ற ஒரு பகுதி பிரிக்கிறது. சில நேரங்களில் அதன் தசை நார்கள் திடீரென்றும் தன்னிச்சையாகவும் சுருங்கி விரிந்து செயல்படுகின்றன. அப்போது ஏற்படுவது தான் விக்கல்.

தன்னிச்சையாக என்றால்....? உங்கள் விருப்பமோ, தேவையோ இல்லாமல் உங்கள் கட்டுப்பாட்டையும் மீறி தானாகவே நடக்கும் செயற்பாடு தான் அது. அதாவது அனிச்சை செயல் போன்றது.

உதாரணத்திற்கு ஒரு சம்பவம் நீங்கள் நடந்து சென்று கொண்டிருக்கின்றீர்கள் கீழே தரையில் பெரிய கற்கள் கிடக்கின்றன. அவற்றை நம் கண்கள் பார்கின்றன. அடுத்த சில மைக்ரோ செகண்ட் நொடிகளிலேயே நம் மூளையின் கைப் போதலாமஸ் பகுதியில் இருந்து ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. அங்கே பெரிய பெரிய கற்கள் கிடக்கின்றன. அதனால் அந்த கற்களை தாண்டிச் செல்ல வேண்டும். இல்லை என்றால் விலகிச் செல்ல வேண்டும் என்பது தான் அந்த உத்தரவு. அந்த உத்தரவை மீறிச்சென்றால் காலில் இரத்தக் காயம் வாங்குவதும் நிச்சயம்.

ஆனால் அனிச்சை செயல் என்பது அப்படிக் கிடையாது. சில அவசரமான நேரங்களில் மூளையின் கைப்போதலாமஸ் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பாகவே சில நடவடிக்கைகளை நாம் மேற்கொள்கிறோம்.

உதாரணம் வேட்டி கட்டிய ஒருவர் ஒரு வெட்ட வெளியில் நடந்து சென்று கொண்டிருக்கிறார். திடீரென்று காற்று வேகமாக வீசுகிறது. அவரையும் அறியாமல் அவரது கை அவர் அணிந்திருக்கும் வேட்டியைப் பிடிக்கச் சொல்லுகிறது.

இந்தச் சம்பவத்தில் கைப்போதலாமசில் இருந்து உத்தரவு வருவதற்கு முன்பே கையானது நடவடிக்கையில் ஈடுபட்டு விடுகிறது.

**சரி இனி விடயத்திற்கு வருவோம்**

விக்கல் நமது உடலுக்கு தேவையான பயனுள்ள ஒன்று தானா என்றால் இல்லை. என்பது தான் பதில் . பெரும்பாலான விக்கல்கள் காரணம் இல்லாமலே தோன்றுகின்றன. அவ்வாறே தாமாகவே விரைவில் நின்று விடுகின்றன. ஓரிரு நிமிடங்களுக்கு மேல் அது நீடிப்பது மிகக் குறைவே . அவ் வாறு விக்கல் ஏற்படும் போது பொதுவாக ஒருவர் நிமிடத்திற்கு 4 முதல் 60 தடவைகள் விக்கக் கூடும். குறைந் தளவு நேரம் மட்டும் நீடிக்கும். அத்தகைய விக்கல்களுக்கு எவ்வித மருத்துவ சிகிச்சையும் தேவையில்லை. ஆனால் சிலருக்கு சில நாட்கள் வரை இந்த விக்கல் விட்டு விட்டு தொடரலாம். இதற்கு காரணம் ஏதாவது நிச்சயம் இருக்கும். அப்படிப்பட்ட நேரங்களில் உடனடியாக மருத்துவரை அணுகுவது தான் நல்லது.

மிகப் பெரிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் கிடைக்கும். அதைச் சரியாகப் பயன் படுத்திக் கொண்டு வெற்றி காண முயலவேண்டும்.
-மெகல்லன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மக்கள் சக்தியை நிலைநாட்ட அனைவரும் வாக்களியுங்கள்

இன்று ஜனாதிபதித் தேர்தல். இருபத்திரண்டு வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர். வாக்களிப்பிற்கான அத்தனை ஏற்பாடுகளும் முடிபுற்றுள்ளதாக தேர்தல் ஆணையாளரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களும் அறிவித்துள்ளனர்.

என்றுமில்லாதவாறு மிகப் பெரும் போட்டியின் மத்தியில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு வீதம் கணிசமாக இருக்குமென நம்பப்படுகின்றது.

அதேநேரம் தேர்தலில் யார் வெல்லுவர் என்ற முடிபிலும் ஊகங்களை கூறமுடியாத அளவிற்கு தேர்தல் ஆதரவு இறுக்குமாக இருப்பதை காணமுடிகின்றது.

எதுவாயினும் ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகளற்றவையாக, நீதியான முறையில் நடந்தேறவேண்டும்.

இதற்காக பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் தேர்தல் கடமையில் ஈடுபடும் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவது அவசியம்.

ஜனாதிபதித் தேர்தல் முடிபுற்று தேர்தல் முடிபுகள் அறிவிக்கப்படும் போது யார் வெற்றி பெறுகின்றாரோ அவர் தனது பதவியைப் பொறுப்பேற்பதற்கான அமைதியான சூழலை உருவாக்குவதும் மிகவும் அவசியமானதாகும்.

தேர்தல் வன்முறைகள் வெடிக்குமாயின் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கைகள் அடிபட்டுப்போகும்.

அதன் பின்னர் எத்தரப்பினர் மீதும் மக்கள் நம்பிக்கை உடையவர்களாக இருக்க மாட்டார்கள்.

எனவேபடைத்தரப்பினர் தேர்தல்வன்முறைக்கு இம்மியும் இடம்வைக்காத வகையில் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும்.

இவை தேர்தல் பணியில் ஈடுபடுவோருக்கானதாக இருக்க, வாக்காளர் பக்கத்திலும் நியாயமான நடவடிக்கைகள் உள்ளன.

அதிலும் மிகவும் முக்கியமானது எல்லா வாக்காளர்களும் தவறாது வாக்களிப்பதாகும்.

வாக்களிப்பை வெறுப்பதோ அல்லது வாக்களிப்பில் அசமந்தமாக இருப்பதோ மோசடிகள் இடம்பெறுவதற்கு வழிகோலும்.

எனவே வாக்காளப் பெருமக்கள் தங்களின் வாக்குகளை அளித்து ஜனநாயகம் மிளிர்வதற்கு உதவவேண்டும்.

வயோதிபர்கள் தமது முதுமை காரணமாக வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல முடியாத நிலையிருந்தாலும், அவர்களுக்கு ஏதோவொரு வகையில் உதவி செய்து அவர்களும் தங்கள் வாக்கை அளிப்பதற்கான ஏற்பாடுகளை இளம் சமூகம் செய்வது முதுமைக்கு கொடுக்கும் கௌரவம் ஆகும்.

எதுவாயினும் மக்கள் சக்தியை நிலைநாட்ட அனைத்து மக்களும் தங்கள் வாக்குரிமையை பிரயோகிக்க வேண்டும்.

# சரியான தெளிவுபடுத்தல்களை ஒளிபரப்ப இலத்திரனியல் ஊடகங்களுக்கு அனுமதி

(கொழும்பு)

மக்கள் மத்தியில் தவறான தகவல்களையும் வன்முறை தொடர்பான பீதியையும் பரப்பி குறைந்தளவு வாக்களிப்பை மேற்கொள்ளச் செய்யும் முயற்சிகளைத் தவிர்ப்பதற்காக சரியான தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் ஒளி பரப்புவதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

நேற்று இலத்திரனியல் ஊடகத் தலைவர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் ஆணையாளர் இதனைத் தெரிவித்துள்ளார். அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக தேர்தல்கள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்ட ஊடக நெறிமுறைகளை மீறுவதாகப் புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்குப் பதிலளிக்கும் வகையில் தேர்தல்கள் ஆணையாளர் இவ்வறிக்கையை விடுத்துள்ளார்.

மேலும் பொது உடைமைகள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதுடன் அரச ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்படுவதாகவும் ஆணையாளரிடம் பல தடவைகள் முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும் இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## பாடசாலை பஸ் சேவையை நடத்துமாறு சாவகச்சேரி மாணவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கப்பூது, சரசாலை, மட்டுவில், நுணாவில் மாணவர்களின் நலன் கருதி இப்பாதையூடாக பாடசாலை பஸ்சேவை நடத்தப்படவேண்டுமென்று மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வழியால் காலையில் பருத்தித்துறை சாலையிலிருந்து சேவையிலீடுபடும் பஸ்ஸில் பொதுமக்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் பயணிப்பதால் பெரும் இடநெருக்கடி ஏற்படுகிறது. இடநெருக்கடியால் பஸ்ஸில் ஏறமுடியாத மாணவர்கள் 5 மைல் தூரம் நடந்தே சாவகச்சேரி பாடசாலைகளுக்கு செல்லவேண்டியுள்ளமையை சுட்டிக்காட்டியுள்ள மாணவர்கள் இப்பாதையூடாக பாடசாலை பஸ்சேவை நடத்தப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர். (2-29)

## சோமாலியாவில் உதவிகளை எதிர்பார்த்து காத்திருக்கும் இலங்கை மாலுமி

(கொழும்பு)

கடந்த 5 மாதங்களாக சோமாலியா கடற்பரப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எம். வி.லைலா கப்பலின் தலைமை மாலுமியான இலங்கையைச் சேர்ந்த சரத் என்பவர் தமக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். 5 மாதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இக் கப்பலில் இலங்கை ,இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சோமாலிய மாலுமிகள் உள்ளதாகத் தெரிவித்துள்ள சரத், தாங்கள் மோசமான நலக்குறைவுக்கு ஆளாகியுள்ளதாகவும் தங்களுக்கு போதிய அளவு உணவு, நீர் மற்றும் அடிப்படைத் தேவைகள் இல்லை என்றும் பல மாதங்கள் தொடர்ந்து கப்பலில் இருப்பதாலும் பலர் தொற்று நோய்களுக்கு ஆளாகி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் எல்லோரும் விரக்தியின் விளிம்பில் இருப்பதாகவும் பலர் தற்கொலை செய்ய முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது அவர்களது கப்பல் கம்பனியிடமிருந்து எவ்வித தகவலும் கிடைக்காத நிலையில் சரத் இந்தியா, இலங்கை, சோமாலியா , ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடம் உதவும்படி கேட்டுள்ளார்.

மேற்படி தகவலை சோமாலிய தலைநகர் பேர்பேராவில் உள்ள ஊடகம் ஒன்றின் மூலம் கேட்டுள்ளார். (2)

## இம்முறை தேர்தலைக் கண்காணிப்பதற்கு 8 கண்காணிப்புக் குழுக்களுக்கு அனுமதி

(கொழும்பு)

இம்முறை ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கு 8 கண்காணிப்புக் குழுக்களுக்கு அனுமதி வழங்கியுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கமைய ஆறு உள்ளூர் கண்காணிப்புக் குழுக்களும் இரண்டு வெளிநாட்டு கண்காணிப்புக் குழுக்களும் தேர்தல் கண்காணிப்புக் கடமைகளில் ஈடுபட முன்வந்துள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் கூறினார்.

தேர்தல்கள் ஆணையாளரினால் வரவழைக்கப்பட்டுள்ள பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்புக் குழு மற்றும் ஆசிய தேர்தல் அதிகார சபைக்கு உட்பட்ட கண்காணிப்புக் குழு ஆகியனவும் தேர்தல் கணிகாணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## பொன்சேகாவுக்கு ஆசி வழங்கியதால் பௌத்த ஆலயம் அடித்து நொறுக்கப்பட்டது

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆசிகளை வழங்கிய பௌத்த ஆலயம் நேற்று அதிகாலை அரச ஆதரவாளர்களால் தாக்கி சேதமாக்கப்பட்டதாக ஆலயத்தின் பிரதம பௌத்த துறவி வண. அம்பலாங்கொட சிறி தம்ம தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அம்பலாங்கொட பகுதிக்கு ஜெனரல் பொன்சேகா விஜயம் மேற்கொண்டபோது எமது ஆலயத்திற்கு வந்து என்னிடம் ஆசிபெற்று சென்றிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஆலயத்திற்குள் புகுந்த இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய குழுவினர் என்னை வெளியில் வரும்படி அழைத்தனர். நான் வெளியே செல்ல மறுத்ததால் ஆலயத்தைத் தாக்கி சேதப்படுத்திவிட்டு சென்றுள்ளனர்.

அவர்கள் செல்லும் போது எனக்கு எச்சரிக்கைகளையும் விடுத்து சென்றுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். நேற்று அதிகாலை ஒரு மணியளவில் அம்பலாங்கொடப் பகுதியின் போரம்ப பிரதேசத்திலுள்ள சுகத பின்ப ரமய பௌத்த ஆலயமே தாக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளது. (2-6)

## தேர்தலுக்கான வாகனங்கள் பல ஒப்படைக்கப்படவில்லை

(கொழும்பு)

தேர்தல் கடமைகளுக்காகப் பயன்படுத்தத் திட்டமிட்டிருந்த வாகனங்களில் பெரும்பாலானவை குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் இதுவரை வந்து சேரவில்லையென தேர்தல்கள் செயலகம் கூறுகின்றது.

தேர்தல் கடமைகளுக்காக இந்த வாகனங்களை ஒப்படைக்குமாறு அமைச்சின் செயலாளர்கள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் முன்னரே அறிவித்திருந்தார்.

இந்த வாகனங்களை உரிய நேரத்தில் ஒப்படைக்காத அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் வாக்கெடுப்பு நடைபெறும் சந்தர்ப்பத்தில் குறித்த வாகனங்களைத் தேர்தல்கள் செயலகத்திடம் ஒப்படைப்பதற்கு அதிகாரிகள் கட்டுப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (2-6)

## தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கூட்டமைப்பு கோரவில்லை

### சுரேஷ் எம்.பி. தகவல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் இன்று இடம்பெறவுள்ள நிலையில் இத்தேர்தலை பகிஷ்கரிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரவில்லை என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்களை இத் தேர்தலில் வாக்களிக்காமல் தடுப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக ஈ.பி.டி.பியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலை பகிஷ்கரிக்கும்படி கோரியதாக சட்டத்திற்கு முரணாக துண்டுப்பிரசுரங்களையும் சுவரொட்டிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனை நம்பாமல் அனைத்து தமிழ் பேசும் மக்களும் ஒருமித்து வாக்களிக்குமாறு அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-7)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



எந்த விதமான சுயநல நோக்கமும் இல்லாமல், பணம், புகழ் மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன் தான் சிறப்பாக பணியாற்றுகிறான்.இத்தகைய மனநிலையில் ஒருவன் பணியாற்ற வல்லவனாகும் போது அவன் ஒரு புத்த பகவான் ஆகிவிடுவான்.உலகத்தையே மாற்றியமைக்கக்கூடிய வகையில் வேலை செய்யும் சக்தி அத்தகையவனிடமிருந்து வெளிப்படுகிறது.

# டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் புதிய தொழில்நுட்பம்

இலங்கையில் கடந்த சில வருடங்களாக மலேரியா நோயின் தாக்கம் வெகுவாகக் குறைந்திருந்திருந்த போதிலும், டெங்கு நோய்த்தாக்கம் தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது.

மலேரியா. டெங்கு ஆகிய நோய்கள் நுளம்புகளினாலேயே காவப்பட்டாலும் இவ்விரு நோய்களும் வெவ்வேறு நோய்களினால் காவப்படுகின்றன. இவ் விரு நுளம்பு வகைகளும் அவற்றின் உயிரியல், சூழல் இயல். நடத்தையியல் என்பவற்றில் வேறுபடுவதன் காரணமாக வெவ்வேறு வகையான நுளம்புக்கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

குறிப்பாக டெங்கு நோயைக் காவும் Aedes aegypti, Aedes albopictus நுளம்புகள் சிறியளவில் நீர் தேங்கும் கொள்கலன்களில் (சூழலில் அநாதரவாக வீசப்பட்ட வெற்றுப்பாத்திரங்கள், சட்டிகள், பூச்சாடிகள், தேங்காய்ச்சிரட்டைகள், கோம்பைகள், பிளாஸ்ரிக் பேணிகள் ....) இனம் பெருகுவதனால் இந்த நுளம்புகளின் குடித்தொகையின் அளவுப் பெருக்கம் கிராமப்புறங்களிலும் பார்க்க நகரப் புறங்களில் உயர்வாக காணப்படுவதுடன், டெங்கு நோயின் தாக்கமும் அதிகமாகவுள்ளது.

பொதுவான டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு முறைகளாக நீர் தேங்கி நிற்கும் கொள்கலன்களை அகற்றுதல், பூச்சிநாசினி விசுறுதல், குடம்பிக் கொல்லிகளை பயன்படுத்துதல் சூழல் முகாமைத்துவம் என்பவற்றுடன் தனிநபர் பாதுகாப்பு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு முறைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவது ஒரு சவாலாகவே அமைகின்றது.

இச்சவாலுக்கு முகம் கொடுப்பதற்கு பொதுவாக நுளம்புக்கட்டுப்பாடுகளுடன் புதிய தொழில் நுட்பங்களை உள்வாங்குவதும் காலத்தின் தேவையாகும்.

**மரபணு மாற்றுத்தொழில் நுட்பம்**

மூலக்கூற்று உயிரியல் (Molecular Biology) உயிரியல் தொழில் நுட்பம் (Bio-technology) ஆகிய துறைகளின் வளர்ச்சி சுமார் 2 தசாப்தங்களுக்கு முன்னர் சாத்தியமில்லை என்ற நிலைப்பாட்டை சாத்தியம் என்னும் நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது. நவீன தொழில்நுட்பத்திற்கூடாக நுளம்புகளின் பிறப்புரிமையியல் மாற்றப்பட்டவை அவை.

❖ நோய்க் காரணியைக் காவும் தன்மையற்றவையாகவோ அல்லது.

❖ தம் குடித்தொகைகளை தாமே கட்டுப்படுத்துவனவாகவோ மாற்றப்படுகின்றன.

டெங்கு நுளம்பு காவியின் அதன் மரபணுவில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தின் மூலம் அதன் குடித்தொகை குறைக்கப்பட்டு நோய்த் தாக்கம் கட்டுப்படுத்த தக்கதாக புதிய அணுகுமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சில தசாப்தங்களுக்கு முன்னர் மனிதனுக்கு பொருளாதார ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பீடைப்பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு கதிர்வீசலின் மூலம் ஆண் பூச்சிகள் மலடாக்கப்பட்டு சூழலில் விடப்படுவதன் காரணமாக பூச்சிப்பீடைகளின் எண்ணிக்கை பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும் மட்டத்திலும் பார்க்க குறைக்கப்பட்டது.

இக் கட்டடுப்பாட்டு முறையில் மலடாக்கப்பட்ட ஆண் பூச்சியுடன் இயற்கையில் காணப்படும் பெண் பூச்சிகள் இனம் கலக்கும் போது வளமான சந்ததிகள் உருவாக்கப்படமாட்டாது. இருந்த போதிலும் நுளம்புகளின் கட்டுப்பாட்டில் கதிர்வீசல் மூலம் மலடாக்கப்பட்ட ஆண் நுளம்புகள் சூழலில் விடப்பட்ட போதும் வெற்றிகரமானதாக அமையவில்லை.

இதற்குப்பிரதான காரணங்களாக கதிர் வீச்சுக்கு உட்படுத்தப்பட்ட ஆண் நுளம்புகள் சூழலில் இயற்கையாக காணப்பட்ட ஆண் நுளம்புகளுடன் இனக் கலப்புக்கான போட்டியில் வினைத்திறனுடன் செயற்பட முடியாமல் போய் விட்டது.

குடம்பி நிலையில் ஆண், பெண் நுளம்புகளை வேறாக்குவது கடினமானதாக அமைந்தது.

தற்போது மரபணு மாற்றுத் தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக நவீன நுளம்புக் கட்டுப்பாட்டில் புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு இயற்கையில் (சூழலில் / களத்தில்) பரிசோதனை ரீதியாக அவற்றின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நிபந்தனையின் கீழ் இறப்பை ஏற்படுத்துதல்**

கதிர்வீசல் அல்லது இரசாயனப் பொருட்களை பயன்படுத்தி ஆண் நுளம்புகளை மலடாக்குவதற்குப்பதிலாக அதே தத்துவத்தின் அடிப்படையில் மரபணு ரீதியில் மாற்றப்பட்ட ஆண் நுளம்புகள் சூழலில் விடப்படுகின்றன.

இவ் ஆண் நுளம்புகள் சூழலில் இயற்கையாகக் காணப்படும் பெண் நுளம்புகளுடன்



இனம் கலக்கும் போது வழித்தோன்றும் பெண் சந்ததிகள் குடம்பி அல்லது கூட்டுப்புழு நிலையில் இறந்து விடுகின்றன. இதன் மூலம் நோயைக் காவும் நுளம்புக்குடித்தொகைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு நோயின் தாக்கம் மட்டுப்படுத்தப்படுகின்றது. இங்கு அதிக எண்ணிக்கையில் ஆண் நுளம்புகள் உயிரியல் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டு சூழலில் விடப்படுவதன் காரணமாக நோய் பரம்பல் அதிகரிக்கப்படுவதற்கான சாத்தியம் தவிர்க்கப்படுகின்றது. ஏனெனில் ஆண் நுளம்புகள் மனிதரைக் கடிப்பதில்லை. குருதியை எடுப்பதில்லை. இதன் காரணமாக அவை நோய்ப்பரம்பலில் பங்கு வகிப்பதில்லை.

இப் புதிய தொழில் நுட்பத்தில் கொள்ளும் தன்மை கொண்ட ஆட்சியான பரம்பரை அலகு (Dominant Lethal) நுளம்புகளின் மரபணுவுடன் இணைக்கப்படுகின்றது. இவ்ஆட்சியானது கொல்லும் தன்மை கொண்ட பரம்பரை அலகின் வெளிக்காட்டல் குறிப்பிட்ட நிபந்தனையின் கீழ் கட்டுப்படுத்தப்படும். இந்நிபந்தனை இல்லாவிடத்து அது வெளிக்காட்டப்பட்டு அங்கி இறக்கும். இங்கு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் இக் கொல் தன்மை கொண்ட நிலை பெண் அங்கிகளிலே மட்மே வெளிக்காட்டப்படும்.

இங்கிலாந்தைச் சேர்ந்த Oxicetec நிறுவனம் இவ்வாட்சியான கொல் தன்மை கொண்ட பரம்பரை அலகை மரபணு மற்றும் தொழில்நுட்பம் மூலம் உட்செலுத்தப்பட்டு முக்கிய டெங்குக்காவி நுளம்பான ஈடிஸ் இஜிப்ரி (Aedes Aegypti) உருவாக்கியுள்ளது. இவ் ஆண், பெண் நுளம்புகள் ஆய்வுகூடத்தில் வளர்க்கப்பட்டு அவற்றின் சந்ததி தொடர்ச்சியாகப் பேணப்படும். ஆனால் தோன்றும் குடம்பி சந்ததிகள் கொல் தன்மை கொண்ட பரம்பரை அலகின் வெளிக்காட்டலின் மூலம் இறப்பதைத் தடைசெய்வதற்காக குடம்பிகளுக்காக வழங்கப்படும் உணவுடன் ரெற்றாசைக்கிளின் (Tetracycline) சேர்க்கப்படுகின்றது. ரெற்றாசைக்கிளின் இருக்கும் நிலையில் இவ்வாட்சியான கொல்தன்மை கொண்ட பரம்பரை அலகு வெளிக் காட்டப்பட மாட்டது. இச் சிறப்பான அம்சம் காரணமாக ஆண் நுளம்புகளை மட்டும் பெற்று அவற்றை சூழலில் விடப்படுவதற்கு முன்னராக உயிரியல் ஆய்வுக்கூடங்களில் ரெற்றாசைக்கிளின் வழங்கப்படுவது நிறுத்தப்படும் .இதன் காரணமாக எல்லா பெண் குடம்பிகளும் இறக்க ஆண் நுளம்புகள் மட்டும் அதிக எண்ணிக்கை பெறப்பட்டு சூழலில் விடப்படும். இவ்வாண் நுளம்புகள் இயற்கையில் காணப்படும் பெண் நுளம்புகளுடன் இனம் கலக்கும் போது தோன்றும் பெண் சந்ததிகள் ஆட்சியான கொல்தன்மை கொண்ட பரம்பரை அலகின் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ளும் இப் பெண் சந்ததிகள் குடம்பி நிலையில் காணப்படும் போது அவை வாழும் நீர்ச்சூழலில் ரெற்றாசைக்கிளின் இல்லாத காரணத்தினால் கொல் தன்மை கொண்ட பரம்பரை அலகு வெளிக்காட்டப்பட (இக்கொல் பரம்பரை அலகு ) பெண் குடம்பிகள் இறந்து விடுகின்றன. இவ்வாறு தொடர்ச்சியாக பெண் நுளம்புகள் சூழலில் இருந்து அகற்றப்படுவதன் காரணமாக டெங்கு நுளம்பின் குடித்தொகை விரைவாக குறைக்கப்படும்.

இவ்வாறு மரபணு மாற்றீடு செய்யப்பட்ட ஆண் நுளம்புகள் இயற்கையில் விடப்படும் போது இயற்கையில் காணப்படும் ஆண் நுளம்புகளைப் போன்று உயிரியல் ரீதியாகவும் , நடத்தியல் ரீதியாகவும் செயற்படுவதை ஆய்வு கூடப்பரிசோதனைகள் நிரூபித்துள்ளன. அண்மையில் மலேசியாவில் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட களப்பரிசோதனைகளின் முடிவுகள் இத் தொழில் நுட்பத்தின் நோக்கத்தை உறுதிப்படுத்துவனவாக அமைகின்றன. எனினும் இன்னமும் சிறந்த களநிலையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**இத்தொழில் நுட்பத்தின் நன்மைகள்**

ஏனைய நுளம்புக்கட்டுப்பாடுகளுடன் ஒப்பிடும் போது இத்தொழில் நுட்பம் சிறப்பான அம்சங்களைக்கொண்டுள்ளது.

❖ நுளம்பைக் கொல்வதற்காக அல்லது குடம்பிகளைக் கொல்வதற்காக இரசாயன பதார்த்தங்கள் (பூச்சி கொல்லிகள்) பயன்படுத்தப்படும் போது அவை நுளம்புகளை மட்டுமன்றி ஏனைய உயிரினங்களையும் பாதிப்பதுடன் சூழல் நஞ்சாக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. ஆனால் இப்புதிய தொழில் நுட்பம் குறித்து நுளம்பினத்தை மட்டும் கட்டுப்படுத்துவதன் சூழல் நஞ்சாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. இதன் காரணமாக பூச்சி நாசினிகளின் பாவனை வெகுவாக குறைக்கப்படுகின்றது.

❖ ஆண் நுளம்புகள் சூழலில் விடப்படுவதால் நோய்ப்பரம்பல் அதிகரிக்கப்படுவதில்லை.

❖ தற்செயலாக ஆய்வுகூடங்களில் இருந்து பெண் நுளம்புகள் தப்பிச் சூழலுக்குச் சென்றாலும் ,நிபந்தனைக்குட்பட்ட கொல் தன்மை கொண்ட மரபணுவைக் கொண்டிருப்பதால் இவற்றில் இருந்து உருவாக்கப்படும் சந்ததிகள் சூழலில் உயிர் வாழாது அழிந்து விடும்.

❖ ஏனைய நுளம்புக்கட்டுப்பாட்டு முறைகளுடன் இணைந்ததாக இத்தொழில் நுட்பத்தை பயன்படுத்தலாம்.

**எதிர்பார்க்கப்படும் பிரதிகூலங்கள்**

இன்னமும் உறுதி செய்யப்படாத விடத்தும் பின்வரும் பிரதி கூலங்களை சிலர் முன் வைக்கின்றனர்.

❖ உதாரணமாக : ஒரு பிரதேசத்தில் டெங்கு நோயைக் காவும் நுளம்பினங்களாக (Aedes Aegypti) ஈடிஸ்இஜிப்ரி (Aedes albopictus) ஈடிஸ்அல்போபிக்ரர்ஸ் காணப்படும் போது முன்னையதின் சந்ததி குறைக்கப்பட பின்னையதின் அளவு அதிகரித்து நோய்ப்பரம்பல் தொடரலாம். இதனைத் தவிர்ப்பதற்கு இரண்டு நுளம்பினங்களையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

❖ இக் கொல் தன்மை பரம்பரை அலகு ஏனைய உயிர் அங்கிகளுக்கு கடத்தப்படலாம். இவ் எதிர்பார்ப்பு நடைபெறுவதற்கான சாத்தியம் மிக மிக அரிதாகும். ஏனெனில் மூலக்கூற்று உயிரியல் அடிப்படையில் இவ்வாறு புகுத்தப்பட்ட மரபணு நகரமுடியாதவாறு அமைக்கப்பட்டுள்ளது.

❖ குறித்த ஒரு அங்கி (இந்நுளம்பு) சூழலில் இருந்து வெகுவாகக் குறைக்கப்படும் போது உணவுச் சங்கிலி பாதிக்கப்பட்டு சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். இப் பிரதிகூல எதிர்பார்ப்பை ஓரளவு ஏற்றுக் கொண்டாலும் ஒரு குறித்த நுளம்பு மட்டும் (ஏனைய பல்வேறு வகை நுளம்புகள் இருக்கும் போது) சூழலில் குறைக்கப்படும் போது எவ்வாறு உணவுச் சங்கிலி பாதிக்கப்பட்டு சூழலில் தாக்கங்கள் ஏற்படலாம் என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

**இலங்கையில் இத்தொழில் நுட்பத்தின் சாத்தியப்பாடு**

மரபணு மாற்றப்பட்ட உயிரங்கிகளோ அல்லது உணவுகளோ பயன்படுத்தப்படும் போது அவை தொடர்பான திட்டவட்டமான சட்ட அமுலாக்கங்கள் ,உயிரியல் பாதுகாப்பு நடைமுறைகளும் அவற்றைக் கண் காணித்தலும், சமூக கலாசார அங்கீ காரங்களும் அவசியமாகும். மரபணு மாற்றப்பட்ட அங்கிகள் தொடர்பாக அவற்றை ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் பற்றி சர்வதேச நடைமுறை ஒன்று உள்ளது. இது *காடகெனா* நடைமுறை (Cartagena Protocol) எனப்படும். இலங்கையும் இந் நடைமுறையில் கைச்சாத்திட்டுள்ளது. இந் நடைமுறைக்கு அமைய மரபணு மாற்றப்பட்ட அங்கிகள் பயன்படுத்தப்படும் போது இந் நடைமுறைக்கமைவாக சில ஒழுங்கமைப்புகளை மேற்கொள்ளவேண்டும். இதன் அடிப்படையில் இலங்கையில் தேசிய ரீதியில் உயிர் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் டெங்கு நோய்யைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கூறிய மரபணு மாற்றப்பட்ட டெங்கு நுளம்பை ஆய்வு கூடத்திலோ அல்லது வரையறுக்கப்பட்ட களத்திலோ முதற்கட்டமாக ஆய்வு செய்வதற்கு தேசிய ரீதியிலும் பல்கலைக்கழகங்களில் அல்லது ஆராய்ச்சி நிலையங்களில் பல்வேறு கட்டமைப்புக்கள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

குறிப்பாக பல்கலைக்கழகங்களில் அல்லது ஆராய்ச்சி நிலையங்களில் உயிர் பாதுகாப்புக்குழுக்களும் தேசிய ரீதியில் மரபணு மாற்றப்பட்ட பூச்சிகளின் பாவனையை அங்கீகரிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் குழுக்கள் அமைக்கப்பட்டு உரிய சட்ட மூலங்கள் இயற்றப்படுதல் வேண்டும்.

கலாநிதி எஸ்.என் .சுரேந்திரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியற்றுறை, விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

நவீன தொழில் நுட்பங்களை உள்வாங்கி மனித மேம்பாட்டிற்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு நாம் ஆயத்தமாக இருத்தல் அவசியமாகும்.மலேசியா, இந்தியா, தாய்லாந்து போன்ற ஆசிய நாடுகள் தமது நாடுகளில் டெங்கு நோயைக்கட்டுப் படுத்துவதற்காக மேற்கூறிய தொழில்நுட்பத்தை பரீட்சித்து பார்க்கத் தயாராகி விட்ட இவ் வேளையில் முக்கிய பொதுச் சுகாதார பிரச்சினையாக விளங்கும் டெங்கு நோயைக்கட்டுப்படுத்த எம்மை நாம் தயார்ப்படுத்துதல் காலத்தின் தேவையாகும்.

# சதமடித்தனர் சச்சின், டிராவிட்; இந்தியா வலுவான நிலையில்

(மிர்பூர்)

டெண்டுல்கர், ராவிட்டின் சிறப்பான சதத்தின் மூலம் இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 459 ஓட்டங்களை எடுத்தது.


பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள நிலையில் தீர்க்கமான 2 ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் மிர்பூரில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 233 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் மகமுடுல்லா ஆட்டமிழக்காமல் 96 ஓட்டங்களையும் மொகமட் அஷ்ரபுல் 39, சகிப் அல்ஹசன் 34, ரகீம் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் இஷாந்த் சர்மா 4 விக்கெட்டுக்களையும் சகீர்கான் 3, ஓஜா 2 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.



தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட்டிழப்பின்றி 69 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் இரண்டாம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய் இந்திய அணிக்கு சேவாக்-காம்பீர் ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் பலமான ஆரம்பம் கிடைத்தது.

இதில் சேவாக் 51 பந்துகளிலும் காம்பீர் 60 பந்துகளிலும் அரைச் சதம் அடிக்க இந்திய அணி 19.5 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

எனினும் சேவாக் 63 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 56 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ராவிட் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் காம்பீர் 83 பந்துகளில் (9 பவுண்டரிகள் உட்பட) 68 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 146 ஓட்டங்களை எடுத்து 2-வது விக்கெட்டையும் இழந்தது.

இந்நிலையில் 3-வது விக்கெட்டுக்காக இணைந்த ராவிட் டெண்டுல்கர் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இந்திய அணி முன்னிலை பெற்றது.

இதில் சச்சின் டெண்டுல்கர் 134 பந்துகளில் டெஸ்ட் அரங்கில் தனது 45-வது சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

மறுமுனையில் ராவிட் 178 பந்தில் தனது 20-வது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 77.5 ஓவர்களில் 350 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடியைப் பிரிக்க பங்களாதேஷ் அணித் தலைவர் களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தபோதும் பலனளிக்கவில்லை. இதில் ராகுல் ராவிட் 188 பந்துகளில் (12 பவுண்டரிகள் உட்பட) 111 ஓட்டங்களை எடுத்த போது உடல் நிலை பாதிப்பால் ஆட்டத்திலிருந்து இடை விலகினார். அடுத்து முரளி விஜய் களமிறங்கி பொறுப்பான ஆட்டத்தை வழங்க இந்திய அணி 89.2 ஓவர்களில் 400 ஓட்டங்களை எட்டியது.

இதில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய சச்சின் டெண்டுல்கர் 182 பந்துகளில் (13பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 143 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 421 ஓட்டங்களை எடுத்து 3-வது விக்கெட்டையும் இழந்தது.

அடுத்து அணித் தலைவர் தோனி களமிறங்க மறுமுனையில் முரளிவிஜய் 30 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ஹர்பஜன் சிங் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 459 ஓட்டங்களை எடுத்தது.

இதில் தோனி ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களை எடுத்தார். பந்து வீச்சில் இஸ்லாம், சகீப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சஹாடாட் ஹுசைன் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 226 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ள நிலையில் 3 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

*காம்பீர் சாதனை*

காம்பீர் நேற்றைய போட்டியில் 68 ஓட்டங்கள் எடுத்தார். அவர் தொடர்ந்து அடித்த 11-வது அரைச் சதம் ஆகும். இதன் மூலம் 1976-1990 ஆண்டு வரை தொடர்ந்து 11 அரைச் சதம் அடித்த விவியன் ரிச்சர்ட்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்) சாதனையைக் காம்பீர் சமன் செய்தார்.

# பங்களாதேஷ் கிரிக்கெட்டில் பரபரப்பு; சபைத் தலைவரிடம் மண்டியிட்டாராம் சகிப்



பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் முஸ்தபா கமாலிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கும் அணித் தலைவர் சகிப் அல் ஹசன்.

(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் முஸ்தபா கமாலிடம் அணியின் தலைவர் சகிப் அல் ஹசன், மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு பங்களாதேஷ் அணி சிறப்பாகச் செயற்பட்டது. மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் சிப்பாவேக்கு எதிராக அசத்தல் வெற்றி பெற்றது.

இதற்கான பாராட்டு விழா சமீபத்தில் டாக்காவில் நடந்தது. அப்போது பேசிய முஸ்தபா கமால் இந்தியாவுடனான தொடரில் பங்களாதேஷ் அணியின் செயற்பாடு குறித்துக் கடுமையாக விமர்சித்தார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

பங்களாதேஷ் வீரர்களிடம் இருந்து 100 சதவீத திறமையை எதிர்பார்க்கின்றேன். வெற்றி பெறுவதை ஒரு பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு நாள் வென்று விட்டு, அடுத்த நாள் தோல்வியடைவதை ஏற்றுக் கொள்ள முடியாது. வீரர்கள் இன்னும் அதிக அர்ப்பணிப்பு உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் தோல்வியடைந்தது ஏமாற்றமளித்தது. இப் போட்டியில் குறைந்த பட்சம் சமநிலை செய்திருக்கலாம் என்றார்.

*சகிப் பதிலடி*

இதற்கு 22 வயதான அணித் தலைவர் சகிப் உடனடியாகப் பதிலடி கொடுத்தார். எந்த ஒரு கிரிக்கெட் வீரரும் தோல்விக்காக விளையாடுவதில்லை. நாங்கள் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவே முயற்சிக்கின்றோம்.

தனி நபராக யாரும் வெற்றி பெற முடியாது. அனைவரும் பொறுப்பாகப் பேசி, எங்களது பணியில் ஒத்துழைக்க வேண்டும். நாங்கள் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற முடியாது. இதற்காக எங்களது நேர்மை பற்றி கேள்வி எழுப்பக் கூடாது என்றார்.

*பகிரங்க மிரட்டல்*

இதனைக் கேட்ட கமால் ஆத்திரப்பட்டுள்ளார். கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளார். இதையடுத்து விழா முடிந்த பின், தனது பேச்சுத் தொடர்பாக முஸ்தபா கமாலிடம் சகிப் அல் ஹசன் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டுள்ளார்.

இது தொடர்பான படங்களை உள்ளூர்ப் பத்திரிகையான கலேர் காந்தோ வெளியிட பங்களாதேஷ் கிரிக்கெட் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

*பழைய பகை*

உள்ளூர் அபகானி அணியின் தலைவராகவும் சகிப் அல் ஹசன் உள்ளார். இதன் அணியின் சபைத் தலைவராக கமால் இருக்கின்றார். சமீபத்தில் நடந்த போட்டியில் பாக்கா முகமதன் அணியிடம் அபகானி அணி தோல்வியடைந்து சம்பியன் பட்டத்தை இழந்துள்ளது.

இதுதான் சகிப் மற்றும் கமாலிடையே மோதல் உருவாகக் காரணமாக அமைந்துள்ளது.

# தோனி-சேவாக் மோதல்?

(மிர்பூர்)

அணித் தலைவர் தோனி, துணைத் தலைவர் சேவாக்கிடையே மோதல் போக்கு உருவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.


இதையடுத்து அணி வீரர்கள் இரு கோஷ்டிகளாகச் செயற்படுகின்றனர். பங்களாதேஷுக்குச் சென்றுள்ள இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

முதல் டெஸ்ட் சிட்டக்கொங்கில் நடந்தது. இப் போட்டியில் முதுகு வலி காரணமாக அணித் தலைவர் தோனி விலகிக் கொண்டார். இதனால் அணித் தலைவர் பொறுப்பு துணைத் தலைவராகவுள்ள சேவாக்கிடம் சென்றது.

விளையாடும் 11 பேர் கொண்ட அணியில் சேவாக், காம்பீர், இஷாந்த் சர்மா, அமித் மிஷ்ரா உள்ளிட்ட டில்லி வீரர்கள் வாய்ப்புப் பெற்றனர்.

விக்கெட் காப்பாளராக டில்லி டேர் டேவில்ஸ் அணியின் தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் செயற்பட்டார். இதில் இந்திய அணி 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுத் தொடரில் 1:0 என முன்னிலை வகிக்கின்றது.

இந் நிலையில் மிர்பூரில் நேற்று முன்தினம் 2-வது டெஸ்ட் ஆரம்பமானது. இதில் அணித் தலைவர் பொறுப்பை மீண்டும் தோனி பெற்றுக் கொண்டார்.



முதல் டெஸ்டில் சிறப்பாகச் செயற்பட்ட போதும் விளையாடும் 11 பேர் அணியிலிருந்து கடைசி நிமிடத்தில் அமித் மிர்ஷா, தினேஷ் கார்த்திக் நீக்கப்பட்டனர்.

இவர்களுக்குப் பதிலாக பிரக்யன் ஓஜா, ஹர்பஜன் சிங் வாய்ப்புப் பெற்றனர். நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் வீழ்த்திய இஷாந்த் சர்மா முதல் டெஸ்டில் விளையாடத் தேர்வு செய்த சேவாக்கிற்குக் நன்றி எனக் கூறினார்.

இதனால் இந்திய அணியில் சேவாக், தோனி தலைமையிலான இரு கோஷ்டிகள் உருவாகியிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

டில்லி வீரர்கள் சேவாக் தலைமையிலான அணியிலும் யுவராஜ், ஹர்பஜன் உள்ளிட்ட சில வீரர்கள் தோனி தலைமையிலான அணியிலும் இடம்பெற்றிருப்பதாகத் தகவல்கள் கூறப்படுகின்றது.

# ஆஸி.ஓபன் டென்னிஸ்; காலிறுதியில் வீனஸ்

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ் தொடர் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. உலகின் 6ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 4 ஆவது சுற்றில் இத்தாலியைச் சேர்ந்த 17-வது நிலை வீராங்கனையான பிரான் செஸ்காவை எதிர் கொண்டார்.

இதில் வீனஸ் வில்லியம்ஸ் 3-6,6-2,6-1 என்ற கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார். வீனஸ் வில்லியம்ஸ் காலிறுதியில் சீனாவின் நாலீயை எதிர்கொள்கிறார்.

நாலீ 4-வது சுற்றில் 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் 4-வது இடத்தில் இருப்பவரான டென்மார்க்கின் கரோலினை அதிர்ச்சிகரமாகத் தோற்கடித்தார்.

மற்றைய காலிறுதி ஆட்டங்களில் பெட்ரோவா (ரஷ்யா)- ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம், ஜிசெஜங் (சீனா)- மரினா கிரிலென்கோ(ரஷ்யா) மோதுகின்றார்கள்.

## அமைதியான...

ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக் கப்படும் என ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது. (ச-5)


# திருமண வைபவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

| திரு.திருமதி | திரு.திருமதி |
|---|---|
| சபாரத்தினம் கனகாம்பிகை | ஶ்ரீதரன் தவமலர் |
| தம்பதிகளின் புத்திரன் | தம்பதிகளின் புதல்வி |
| கிருஷ்ணச்செல்வன் | மைத்திரிகா |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

நாளை 27.01.2010 புதன்கிழமை வண்ணை ஶ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் ஶ்ரீ லக்ஷ்மி நாராயணன் திருமண மண்டபத்தில் நடைபெற விருந்த திருமண வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

தகவல்

| திரு.திருமதி | திரு.திருமதி |
|---|---|
| ஶ்ரீதரன் குடும்பத்தினர் | சபாரத்தினம் குடும்பத்தினர் |
| (திரு.அ.சுந்தரலிங்கம்) | கேணியடி, கொக்குவில் |
| 162/3, பருத்தித்துறை வீதி, | மேற்கு, கொக்குவில். |
| நல்லூர், யாழ்ப்பாணம். | T.P.:077 382 4994 |
| T.P.:021 222 6491 | |
| 077 774 7095 | |

(527)








## முக்கிய அறிவித்தல்

# இலவச தோல் சிகிச்சை நிலையம்

தோல்வியாதி வைத்திய நிபுணர் (Consultant Dermatologist, Dr. T.S. ரவீந்திரன் F.R.C.P (The United Kingdom), M.Sc (Dermatology-the United Kingdom) அவர்கள் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையிலும், இணுவில் மக்லியோட் வைத்தியசாலையிலும் 27.01.2010, புதன்கிழமை தொடக்கம் இலவசமாக தோல் வியாதிகளுக்கான சிகிச்சை அளிப்பார் என்பதை அறியத் தருகின்றேன்.

மருத்துவ மேலதிகாரி,
Medical Superintendent
24.01.2010

| கிறீன் ஞாபகார்த்த | மக்லியோட் |
|---|---|
| வைத்தியசாலை, | வைத்தியசாலை, |
| மானிப்பாய் | இணுவில் |
| 021 222 2747 | 021 222 7669 |

(524)


# மூன்று இலட்சம் வாக்காளர் அட்டைகள்...

வாக்காளர் அட்டைகள் விநியோகம் குறித்து வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு பி.பி.ஸி. தமிழோசைக்கு தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்திற்கு 6 இலட்சத்து இரு பதாயிரம் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெற்றன. 23ஆம் திகதி வரை எமது அஞ்சல் அலுவலகங்களினால் 4 இலட்சத்து 55 ஆயிரத்து 551 அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

எம்மிடம் சுமார் ஒரு இலட்சத்து 69 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் விநியோகத்திற்காக கையிருப்பில் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான வாக்காளர் அட்டைகளில் 84 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெற்றன. எனினும் 11 ஆயிரத்து 704 வாக்காளர் அட்டைகள் மாத்திரமே விநியோகம் செய்யக் கூடியதாக இருந்தது. சுமார் 72ஆயிரம் வாக்காளர் அட்டைகள் கையிருப்பில் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டம் மற்றும் பூநகரிப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் தங்கியுள்ளமையால் அவர்களின் வாக்காளர் அட்டைகளைச் சீராக விநியோகிக்க முடியவில்லை.

நாட்டின் பிறமாவட்டங்களில் வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்படுவதற்காக இம்மாதம் 6ஆம் திகதி அஞ்சல் திணைக்களத்திடம் தேர்தல் திணைக்களத்தினால் கையளிக்கப் பட்டது. ஆனால் வடமாகாணத்திலுள்ள அஞ்சல் திணைக்களத்திற்கு வாக்காளர் அட்டைகள் 12ஆம் திகதியே கையளிக்கப்பட்டன.

இவ்வாக்காளர் அட்டைகளை 13ஆம் திகதி முதல் 23 திகதி வரை விநியோகித்தோம் எஞ்சிய அட்டைகளை எமது அலுவலகத்திலுள்ள விசேட கருமபீடத்தினூடாக கையளித்து வருகிறோம். இச்சேவை நாளை (இன்று) மாலை 4 மணிவரை வடமாகாணத்திலுள்ள எமது அனைத்துக் காரியாலயங்களிலும் நடைபெறும்.

வன்னித் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த முல்லைத்தீவு மாவட்டத்திற்கு என சுமார் 58 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் எம்மிடம் கையளிக்கப்பட்டன. அவற்றில் 13 ஆயிரத்து 795வாக்காளர் அட்டைகள் மட்டுமே விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

# நாட்டின் அடுத்த ஜனாதிபதி யார்?...

ஜனாதிபதித் தேர்தல் இன்று நடை பெறவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் 22 மாவட்டங்களைச் சேர்ந்த 1 கோடியே 40 இலட்சத்து 88 ஆயிரத்து 500 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

11 ஆயிரத்து 98 வாக்களிப்பு நிலையங்களில் இன்று காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை வாக்களிப்பு நடைபெறவுள்ளது. இம் முறை ஜனாதிபதித் தேர்தலில், ஆகக் கூடுதலாக வாக்காளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர். யாழ். மாவட்டத்தில் 7 லட்சத்து 21 ஆயிரத்து 359 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தல்கள் செயலகத்தின் தரவுகளுக்மைய் 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 33 இலட்சத்து 27 ஆயிரத்து 160 ஆக அமைந்திருந்தது.

இம் முறை ஜனாதிபதித் தேர்தலில் 1 கோடியே 40 இலட்சத்து 88 ஆயிரத்து500 பேர் வாக்காளர்களாக பதிவுசெய்ய பட்டுள்ளனர். இதன் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 7 இலட்சத்து 61 ஆயிரத்து 340 பேர் புதிய வாக்காளர்களாக பதி வாகியுள்ளனர்.

மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் தற்காலிகமாக தங்கிருக்கும் வடபகுதியைச் சேர்ந்த நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் நேற்று முன்தினம் அறிவித்தது.

இதேவேளை தேர்தல் வாக்களிப் பின் போது வன்முறைகளில் ஈடுபடு வோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யவும் பொலிஸாரிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று வரையான காலப்பகுதியில் 850ற்கும் அதிகமான தேர்தல் வன் முறை தொடர்பிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். இந்நிலையில் அரசாங்கமும் முக்கிய தலை வர்களும் அமைதியான தேர்தல் ஒன்று நடத்தப்பெறவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணங் களில் இடம் பெயர்ந்த மக்கள் வாக்களிப்ப தற்கு வசதியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் நாட்டின் ஏனைய பகு திகளிலும் கொத்தணி வாக்களிப்பு நிலையங் கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதேவேளை இடம் பெயர்ந்த வாக்காளர்களின் போக்குவரத்திற்காக இலவச பிரயாண ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பிலும் அசம்பாவிதங்கள் நிகழலாம் என கருதப்படும் இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு முக்கிய கேந்திர நிலையங்கள் அமைந்துள்ள இடங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ச-3,5,14)

## கூட்டமைப்புக்கு...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாவட்டத்தில் செய்த தேர் தல் பிரசாரத்திற்கு தனது வானை வாடகைக்கு வழங்கிய பொதுமகனின் வீடு நேற்றிரவு 8 மணியளவில் ஆயுததாரிகளினால் தாக்கப் பட்டது.

இதன் போது 2வான்களில் பிஸ்ரல்கள், கோடரி போன்றவற்றுடன் சென்ற ஆயுததாரிகள் பொதுமகனின் வானை முற்றாக அடித்து நொருக்கியதுடன் வீட்டுத் தளபாடங்களையும் அடித்து உடைத்துள்ளனர்.

இது தொடர்பில் தாக்குதலுக்குள்ளான வீட்டின் உரிமையாளர் அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்துடன் யாழ்-பருத்தித்துறை வீதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரனின் தலைமை அலுவலகத்திற்கு நேற்றிரவு வானில் வந்த இனந் தெரியாதோர் கல்வீச்சை நடத்தி விட்டுத்தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் யாழ். அமைப் பாளர் ரமேஷ் குறிப்பிட்டார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற பாரிய தேர்தல் வன்முறை இது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஜனாதிபதித் தேர்தலில்...

இது தொடர்பாக விபரம் வருமாறு, வாக்காளர்கள் தனியொருவருக்குத் தமது வாக்கை அளிக்கலாம். அல்லது மூன்று வேட்பாளருக் குத்தமது விருப்பத் தெரிவின் ஒழுங்கில் வாக்களிக்க முடியும்.

ஒரேயொரு வேட்பாளருக்கு மட்டும் தமது வாக்கை அளிக்க விரும்பும் வாக்காளர் தமது வாக்குச் சீட்டில் தான் விரும்பும் வேட்பாளரின் பெய ருக்கும் சின்னத்திற்கும் அருகில் உள்ள கூட்டில் X புள்ளியிடலாம். அல்லது '1' என்ற அடையாளத் தையோ இடுவதன் மூலம் தமது வாக்கை அளிக்க முடியும்.

ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று வேட்பாளர்களுக்கு தமது விருப்புத் தெரிவின் அடிப்படையில் வாக்களிக்க விரும்பும் வாக் காளர்கள் தமது வாக்குச்சீட்டில் அந்த விருப்பத் தெரிவின் ஒழுங்குப்படி சம் பந்தப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் சின்னங்களுக்குதிரே உள்ளகூட்டில் '1', '2', '3' என்ற இலக்கங்களை வரிசைப்படி இட வேண்டும்.

அந்த வாக்காளர் '1' என்ற இலக் கத்தைக் குறிப்பிடும் வேட்பாளர் அவரின் (அந்த வாக்காளரின்) முதல் தெரிவாகவும், '2' என்ற இலக்கத் தைக் குறிப்பிடும் வேட்பாளர் அவரின் இரண்டாவது தெரிவாகவும் '3' என்ற இலக் கத்தைக் குறிப்பிடும் வேட்பாளர் மூன்றாவது தெரிவாகவும் கரு தப்படுவர்.

இதைவிட முதலாவது தெரிவை '1' எனக் குறிப்பிடாது விட்டுவிட்டு '2' மற்றும் '3' தெரிவுகளை மட்டும் வாக்குச் சீட்டில் குறிப்பிட்டால் அந்த வாக்கு செல்லுபடியற்றதாகிவிடும் என் பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதேசமயம் ஒரு வாக்காளர் தமது முதலாவது மற்றும் இரண்டாவது தெரிவைக் குறிப்பிட்டுவிட்டு மூன்றாவது தெரிவைக் குறிப்பிடாமல் விடமுடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில் வாக்கு எண்ணிக்கையில் அந்த வாக்கு செல்லு படியற்றதாகிவிடும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதேசமயம் ஒருவாக்காளர் தமது முதலாவது மற்றும் இரண்டாவது தெரிவைக் குறிப்பிட்டு விட்டு மூன்றாவது தெரிவைக் குறிப்பிடாமல் விடமுடியும் அத்தகைய சந்தர்ப்பத்தில் வாக்கு எண்ணிக்கையில் அந்தவாக்குச சேர்த்துக்கொள்ளப்படும். (ச-5)


யாழ். மக்கள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
வலம்புரியின்

# திருமண தரிசனம்

உங்கள் வலம்புரியில் ஞாயிறு தோறும் வெளிவரும். எங்கள் உறவுகளின் வெளிநாட்டு தொடர்புக்காக இணையத்தளத்திலும் திருமண தரிசனம் வெளிவரும்.

அன்பார்ந்த பெற்றோர்களே! உங்கள் பொறுப்பை இலகுவாக்க வலம்புரியின் சேவையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



தொடர்பு:
நேரில்
இல. 3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.